winmeen.com

NOTES

QUESTIONS

ஒன்பதாம் வகுப்பு சமூக அறிவியல் மூன்றாம் பருவம்

9th Standard – Social Science – Third Term

Notes & Questions

Table of Contents
வரலாறு
1. புரட்சிகளின் காலம்
2. தொழிற்புரட்சி
3. ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம்
புவியியல்
1. மனிதனும் சுற்றுச் சூழலும்
2. நிலவரைபடத் திறன்கள்
3. பேரிடர் மேலாண்மை – பேரிடரை எதிர்கொள்ளுதல்
குடிமையியல்
1. அரசாங்கங்களின் வகைகள்
2. உள்ளாட்சி அமைப்புகள்
3. சாலை பாதுகாப்பு
பொருளியல்
1. தமிழ்நாடு வேளாண்மை
2. இடம் பெயர்தல்

Prepared By

Winmeen Team

winmeen.com

ஒன்பதாம் வகுப்பு – மூன்றாம் பருவம்

வரலாறு

1. புரட்சிகளின் காலம்

அமெரிக்காவில் இங்கிலாந்து நிறுவிய முதல் குடியேற்றம் ஜேம்ஸ் டவுன் என்பதாகும். அமெரிக்காவில் 13 ஆங்கில குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. அக்குடியேற்றங்கள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்தன.

அமெரிக்க பூர்வீக மக்கள் தோட்டங்களில் வேலை செய்தனர். ஐரோப்பிய தோட்ட முதலாளிகள் தேயிலையை உற்பத்தி செய்தனர். தோட்டங்களில் வேலை செய்ய ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளை ஐரோப்பியர் விலை கொடுத்து வாங்கினர். அமெரிக்காவில் ஐரோப்பிய நாடுகளில் இங்கிலாந்து முன்னிலை பெற்றது. 1756 – 63ல் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே ஏழாண்டுப் போர் நடைபெற்றது. இப்போரில் பிரான்ஸை இங்கிலாந்து தோற்கடித்து கனடாவைப் பெற்றது. அப்போரினால் இங்கிலாந்துக்கு அதிக செலவு ஏற்பட்டது. இச்செலவுகளை அமெரிக்காவில் உள்ள 13 ஆங்கில குடியேற்றங்கள் ஏற்க வேண்டும் என்று இங்கிலாந்து கூறியது. 1764 ஆம் ஆண்டில் சர்க்கரைச் சட்டம் குடியேற்ற நாடுகளில் ரம் என்னும் மதுபானத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை தடை செய்தது. மேலும் இறக்குமதி செய்யப்படும் வெல்லப்பாகு, மதுபானங்கள், பட்டு, காப்பி, ஆடம்பர பொருட்களின் மீதும் வரி விதித்தது. இதனை அமெரிக்க குடியேற்றங்கள் எதிர்த்தன. பிரதிநிதித்துவம் இல்லையேல் வரி இல்லை " என அவர்கள் முழங்கினர். 1765 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட படைவீரர் தங்குமிடச் சட்டம் அமெரிக்காவில் ஆங்கிலப் படைகளைத் தங்க வைப்பதால் ஏற்படும் செலவுகளை குடியேற்ற நாடுகள் ஏற்கும்படி செய்தன.

1765 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட முத்திரைத்தாள் சட்டத்தின்படி இங்கிலாந்தில் தயாராகும் முத்திரையிடப்பட்ட தாள்களிலேயே அச்சிடப்பட வேண்டுமெனக் கூறியது.

1766ல் பிரகடனச் சட்டத்தை இங்கிலாந்து இயற்றியது. இது குடியேற்றங்களுக்கான சட்டங்களை இயற்றும் உரிமை இங்கிலாந்து நாடாளுமன்றத்திற்கே உண்டு எனக் கூறியது. இங்கிலாந்து நிதி அமைச்சர் சார்லஸ் டவுன்ஷெண்ட் 1767ல் இறக்குமதி பொருட்கள் மீது புதிய வரிகளை விதித்தார். இச்சட்டங்கள் குடியேற்றங்கள் இறக்குமதி செய்யும் கண்ணாடி, காகிதம், வர்ணப்பூச்சு, தேயிலை, ஈயம் ஆகியவற்றின் மீது வரிவிதித்தன. பாஸ்டனைச் சேர்ந்த வர்த்தகர்கள் இங்கிலாந்து பொருள்களை இறக்குமதி செய்வதில்லை என முடிவு செய்தனர். பாஸ்டன் துறைமுகத்திற்கு இங்கிலாந்து தேயிலையை கொண்டு சென்றது. 1773 டிசம்பரில் அமெரிக்க பூர்வகுடி மக்களைப்போல் மாறுவேடம் பூண்டு கப்பல்களின் மேலேறி தேயிலையைக் கடலில் வீசினர். இது "பாஸ்டன் தேநீர் விருந்து " என நாடுகளின் படைக்கு வருணிக்கப்பட்டது. இந்நிகழ்வு இங்கிலாந்துக்கும், குடியேற்ற நாடுகளுக்குமிடையே போர் ஏற்படுவதற்கு வழிகோலியது. குடியேற்ற ஜார்ஜ் வாஷிங்டன் தலைமை வகித்தார். ஆங்கிலேயப் படைக்கு எதிராக குடியேற்றங்கள் போரைத் தொடங்கின. சாரடோகா என்னும் இடத்தில் இங்கிலாந்து படைகள்

தோற்கடிப்பட்டன. குடியேற்ற நாடுகளுக்கு பிரான்ஸ் உதவி செய்தது. 1778ல் நடந்த போரில் இங்கிலாந்து படைகள் தோற்கடிப்பட்டன. 1783ல் பாரிஸ் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்திரத்தை இங்கிலாந்து ஏற்றுக் கொண்டது. ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவரானார்.

பிரெஞ்சுப் புரட்சி

பிரெஞ்சுப் புரட்சி 1789ல் வெடித்தது. பிரான்சின் மன்னர் 16 ஆம் லூயி பிரான்ஸ் நாடாளுமன்றமான ஸ்டேட்ஸ் ஜெனரலை கூட்டினார். இச்சபை பிரபுக்கள், மதகுருமார்கள், உறுப்பினர்கள் வாக்களித்தனர். மக்கள் சபை உறுப்பினர்கள் மூன்று சபையும் ஒன்றாக கூட்ட வேண்டும் எனக் கூறியது. இதனை மன்னர் 16-ம் லூயி ஏற்க மறுத்தார். இதனால் மக்கள் சபை உறுப்பினர்கள் டென்னிஸ் விளையாட்டு மைதானத்திற்குச் சென்றனர். புதிய அரசியலமைப்பை உருவாக்கும் வரை கலைந்து போவதில்லை என அவர்கள் உறுதி மேற்கொண்டனர். இவ்வாறு 1789 ஆம் ஆண்டு பிரான்ஸில் புரட்சி தொடங்கியது.

பிரான்சில் லூயி மன்னர்கள் சர்வாதிகார ஆட்சியை நடத்தினர். 1774ல் 16 ஆம் லூயி பிரான்சில் அரியணை ஏறினார். அவரது மனைவி மேரி அன்டாய்னெட்டின் கட்டுப்பாட்டில் 16 ஆம் லூயி இருந்தார். 16 ஆம் லூயியும், அவரது மனைவியும் தெய்வீக பிரதிநிதியாகக் கருதப்பட்டனர். அரசனும் அரசியும் மக்களால் வெறுக்கப்பட்டனர். புரட்சி வெடித்தபோது பிரான்சில் பொருளாதார சிக்கல்கள் ஏற்பட்டன. ஏழாண்டுக் போரில் பிரான்ஸ் தோல்வி அடைந்தது. இதனால் பிரான்சின் கருவூலகம் காலியானது. அரச குடும்பத்தினர் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டனர். புதிய வரிகள் விதிக்கப்பட்டன. ஆனால் பிரபுக்கள், மதகுருமார்கள் வரி கட்ட வேண்டியதில்லை. பொதுமக்கள் வரியைக் கட்டினர். பிரான்சில் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் பிரான்சின் நாடாளுமன்றமான ஸ்டேட்ஸ் ஜெனரலை 16 ஆம் லூயி கூட்டினார்.

சமுதாயத்தில் சாதாரண மக்கள் பின் தங்கிய நிலையில் இருந்தனர். அவர்கள் பிரபுகளுக்கும், மதகுருமார்களுக்கும் ஊதியம் இல்லாமல் உழைக்க வேண்டியிருந்தது. விவசாயிகள் பட்டினியால் வாடினர்.

வால்டேர், மாண்டெஸ்கியூ, ரூசோ ஆகிய தத்துவ ஞானிகள் பிரான்ஸில் நிலவிய நிலையை விமர்ச்சித்தனர். அமெரிக்க விடுதலைப் போரும் பிரெஞ்சுப் புரட்சிக்கு காரணமாக அமைந்தது. டென்னிஸ் மைதானத்தில் இருந்த பொதுமக்கள் ஒன்றுகூடி பாஸ்டில் சிறையை வீழ்த்தினர். புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என மக்கள் போராடினர். அரச குடும்பத்தினர் தப்பி ஓடினர். அவர்கள் கைது செய்யப்பட்டு பாரிஸ் நகரில் சிறையிலடைக்கப்பட்டனர். 1791ல் தேசிய சட்டமன்றம் முதல் அரசியலமைப்பை உருவாக்கியது. டான்டனும். ரோபஸ்பியரும் பயங்கர ஆட்சியை பிரான்சில் நடத்தினர். கில்லட்டின் இயந்திரத்தின் மூலம் 16ஆம் லூயும், அவரது மனைவியும் கொல்லப்பட்டனர். ரோபஸ்பியரின் வீழ்ச்சியுடன் பயங்கர ஆட்சி முடிவுக்கு வந்தது. அதன்பின் இயக்குநர் குழு ஆட்சிப் பொறுப்பேற்றது. பின்பு இயக்குநர் குழு கலைக்கப்பட்டது. மூவர் கொண்ட கான்சுலேட் ஆட்சி பொறுப்பேற்றது. பின்பு கான்சுலேட் ஒழிக்கப்பட்டது. நெப்போலியன் பிரான்ஸ் நாட்டின் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். பிரெஞ்சுப் புரட்சி

பிரான்சில் வரம்பற்ற முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கோட்பாட்டை உலகிற்கு பிரெஞ்சுப் புரட்சி அளித்தது.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட முதல் ஆங்கிலேய காலனி .... ஆகும்

அ) நியூயார்க் ஆ) பிலடெல்பியா

இ) ஜேம்ஸ்டவுன் ஈ) ஆம்ஸ்டெர்டாம்

2. பிரெஞ்சுப் புரட்சியின் முன்னோடியாக, வாஷிங்டனுடன் கூட்டுச் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக போராடியவர் ....

அ) டான்டன் **ஆ) லஃபாயெட்**

இ) நெப்போலியன் ஈ) ஆபிரகாம் லிங்கன்

3. .... லஃபாயட், தாமஸ் ஜெபர்சன், மிரபு ஆகியோரால் எழுதப்பட்டது.

அ) சுதந்திர பிரகடனம் ஆ) பில்னிட்ஸ் பிரகடனம்

இ) மனிதன் மற்றும் குடிமகன் உரிமைகள் பற்றிய பிரகடனம்

ஈ) மனித உரிமை சாசனம்

4. .... இல் ஆங்கிலேயரின் தோல்வி பிரான்சிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான நட்புக்கு வழிவகுத்தது.

அ) டிரென்டன் **ஆ) சாரடோகா**

இ) பென்சில் வேனியா ஈ) நியூயார்க்

5. பிரான்சில் அரச சர்வாதிகாரத்தின் சின்னமாக இருந்தது.

அ) வெர்சே மாளிகை ஆ) பாஸ்டில் சிறைச்சாலை

இ) பாரிஸ் கம்யூன் ஈ) ஸ்டேட்ஸ் ஜெனரல்

6. ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவின் படைகள், பிரெஞ்சுப் புரட்சியாளர் படைகளால் .... போர்களத்தில் தோற்கடிப்பட்டன.

அ) வெர்ணா ஆ) வெர்சே

இ) பில்னிட்ஸ் **ஈ) வால்மி**

7. ‘கான்டீட்’ நூலை எழுதியவர் ....

அ) வால்டேர் ஆ) ரூசோ

இ) மாண்டெஸ்கியூ ஈ) டாண்டன்

8. பதினாறாம் லூயியின் கீழ்க் குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட முடியாட்சியைத் தக்கவைத்துக் கொள்ள விரும்பிய மிதவாத தாராளவாதிகள் ....

அ) ஜெரோண்டியர் ஆ) ஜேக்கோபியர்

இ) குடியேறிகள் ஈ) அரச விசுவாசிகள்

9. .... ஆம் ஆண்டில் பாரிஸ் உடன்படிக்கையின் அமெரிக்க சுதந்திரப் போர் முடிவுக்கு வந்தது.

அ) 1776 ஆ) 1779 இ) 1781 **ஈ) 1783**

10. தாமாஸ் பெயின் எழுதிய புகழ்வாய்ந்த நூல் ....

அ) இயல்பறிவு ஆ) மனித உரிமைகள்

இ) உரிமைகள் மசோதா ஈ) அடிமைத்தனத்தை ஒழித்தல்

2. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இரண்டாம் கண்டங்கள் மாநாட்டில் அஞ்சல்துறை தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் **பெஞ்சமின் பிராங்ளின்**

2. பங்கர் குன்றுப்போர் நடைபெற்ற ஆண்டு **1775 ஆம் ஆண்டு ஜீன் 17**

3. **செலவாணிச்** சட்டம் கடனைத் தங்கமாகவும் வெள்ளியாகவும் திரும்பச் செலுத்த வற்புறுத்தியது.

4. பிரான்சின் தேசியச் சட்டமன்றத்தின் தலைவர் **மிரபு** ஆவார்.

5. சுதந்திரத்திற்கும் பகுத்தறிவிற்கும் பெரும்விழா நடத்திய **ஹெர்பர்ட்** கில்லட்டினால் கொல்லப்பட்டார்.

6. பதினாறாம் லூயி பிரான்சை விட்டு தப்பியோட முயன்றபோது **வெர்னே** நகரில் அவர் தனது குடும்பத்துடன் கைது செய்யப்பட்டார்.

3. சரியான கூற்றினைக் கண்டுபிடி

1. (i). கடலாய்வுப் பயணங்களை மேற்கொண்டதில் போர்த்துகீசியர் முன்னோடியாவர்.

(ii). பென் என்ற குவேக்கரால் புதிய பிளைமவுத் பெயரிடப்பட்டது.

(iii). குவேக்கர்கள் போருக்கு ஆதரவாக இருந்தமைக்கு நற்பெயர் பெற்றனர்.

(iv). ஆங்கிலேயர்கள் நியூ ஆம்ஸ்டர்டாமை நியூயார்க் என பெயர் மாற்றம் செய்தனர்.

அ) (i) மற்றும் (ii) சரியானவை ஆ) (iii) சரி

இ) (iv) சரி **ஈ) (i) மற்றும் (iv) சரியானவை**

2. (i). அமெரிக்க விடுதலைப் போர் இங்கிலாந்துடன் செய்யப்பட்டபோராக மட்டுமல்லாது உள்நாட்டுப் போராகவும் அமைந்தது.

(ii). ஆங்கிலேயப் படைகள் யார்க்டவுனில் வெற்றிபெற்றன.

(iii). வளர்ந்துவரும் நடுத்தர வர்க்கத்தினரைப் பிரெஞ்சு பிரபுக்கள் ஆதரித்தனர்.

(iv). ஆங்கிலேய நாடாளுமன்றம் தேயிலை வரியைத் தவிர மீதான வரி நீங்கலாக ஏனைய பொருட்களின் மீதான டவுன்ஷெண்ட் சட்டங்களை ரத்து செய்தது.

அ) (i) மற்றும் (ii) சரியானவை ஆ) (iii) சரி

இ) (iv) சரி **ஈ) (i) மற்றும் (iv) சரியானவை**

3. கூற்று: ஆங்கிலேயப் பொருட்களைப் பாஸ்டன் வணிகர்கள் புறக்கணித்தனர்.

காரணம் : ஆங்கிலேய நிதி அமைச்சர், அமெரிக்க காலனிகளில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது புதிய வரி அறிமுகப்படுத்தினார்.

அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

ஆ) கூற்று தவறு, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

4. கூற்று : கட்டாய இராணுவச் சேவைக்கு எதிராக வெண்டி என்னுமிடத்தில் விவசாயிகள் ஒரு பெரும்புரட்சி செய்தனர்.

காரணம் : அரசரின் ஆதரவாளர்கள் விவசாயிகள் அவருக்கெதிராகப் போரிட விரும்பவில்லை.

அ) கூற்றும் காரணமும் தவறானவை ஆ) கூற்றும் காரணமும் சரியானவை.

இ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

3. பொருத்துக

		விடை
1. ஜான் வின்திராப் -	பிரான்சின் நிதி அமைச்சர்	-மாசாசூசட்ஸ் குடியேற்றம்
2. டர்காட் -	ஜீலை 4	-பிரான்சின் நிதி அமைச்சர்
3. சட்டத்தின் சாரம் -	இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ்	-மான்டெஸ்கியூ
4. மேரி அண்டாய்னெட் -	மாசாசூசட்ஸ் குடியேற்றம்	-பதினாறாம் லூயி
5. ஏழாண்டுப் போர் -	பதினாறாம் லூயி	-இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ்
6. அமெரிக்கச் சுதந்திர தினம் -	மான்டெஸ்கியூ	-ஜீலை 4

4. சிறுவினாக்கள்

1. பியூரிட்டானியர் என்போர் யார்? அவர்கள் இங்கிலாந்தை விட்டு ஏன் வெளியேறினர்?

இங்கிலாந்தில் பிளைமவுத் நகரில் இருந்த பிராட்டஸ்டெண்ட் மதப் பிரிவினர் பியூரிட்டானியர் ஆவார்கள். பியூரிட்டானியர் என்றால் தூய நெறியாளர் எனப் பொருள் ஆகும். இவர்கள் இங்கிலாந்து திருச்சபையைச் சீர்திருத்த மேற்கொண்ட முயற்சிகளை முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் ஆகிய அரசர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இவ்வரசர்கள் மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளால் பியூரிட்டானியர்கள் இங்கிலாந்திலிருந்து வெளியேறினர்.

2. குவேக்கர் பற்றி நீவிர் அறிவதென்ன?

குவேக்கர்கள் இங்கிலாந்தில் ஜார்ஜ் பாக்ஸ் என்பவரால் நிறுவப்பட்ட நண்பர்கள் குழாம் என்னும் கிறித்துவ மதக்குழுவின் உறுப்பினர். ஆவர். புனித ஆவிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். இவர்கள் சடங்குச் சம்பிரதாயங்களையும், சமயக் குருமார் அமைப்பையும் எதிர்த்தனர். இவர்கள் போருக்கு எதிராகவும், அமைதிக்கு ஆதரவாகவும் மேற்கொண்ட பணிகளுக்கான நற்பெயர் பெற்றவர்கள்.

3. 'பாஸ்டன் தேநீர் விருந்தின்' முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக

இங்கிலாந்து குடியேற்ற நாடுகளின் மீது வரியை விதித்தது. அந்நிய நாட்டுத் தேயிலையைப் புறக்கணிப்பதாக குடியேற்றங்கள் முடிவு செய்தன. குடியேற்றங்களின் பல பகுதிகளில் தேயிலையை இங்கிலாந்து இறக்குமதி செய்தது. இதனால் குடியேற்றங்களைச் சேர்ந்தவர்கள் தேயிலையை இறக்காமல் இருந்தனர். பாஸ்டன் துறைமுகத்திற்கு கப்பலில் தேயிலை வந்திறங்கியது. 1773ல் டிசம்பரில் குடியேற்ற மக்கள் அமெரிக்கப் பூர்வ மக்கள்போல் மாறுவேடம் பூண்டு கப்பல்களில் ஏறி தேயிலையை கடலில் வீசினர். இது "பாஸ்டன் தேநீர் விருந்து" என வர்ணிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி குடியேற்றங்களுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே வர்ணிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி குடியேற்றங்களுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே போர் ஏற்பட வழிவகுத்தது.

4. செப்டம்பர் படுகொலை பற்றி ஒரு குறிப்பு வரைக.

பிரான்ஸ் மன்னர் தன்னடைய சுவிட்சர்லாந்து காவலர்களை மக்களை நோக்கி சுடுமாறு ஆணை பிறப்பித்தார். இதனால் ஆத்திரமடைந் பொது மக்கள் அரச ஆதரவாளர்களை மாரட் என்பவரின் தலைமையில் வேட்டையாடினர். செப்டம்பர் மாதம் தொடங்கி மூன்று நாட்களில் மாற்றுக் கருத்துடைய எதிரிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 1500 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். விசாரணைக்குப் பின்னர் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். பிரான்ஸ் நாட்டு வரலாற்றில் இது “செப்டம்பர் படுகொலை” என்று அழைக்கப்பட்டது.

5. பிரான்சின் மூன்று வர்க்கங்களின் அமைப்பு (Three Estates) பற்றி எழுதுக.

பிரான்சின் நாடாளுமன்றம் ஸ்டேட்ஸ் ஜெனரல் என அழைக்கப்பட்டது. இவ்வமைப்பு மூன்று வர்க்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தது. அவர்கள் 1. மதகுருமார்கள், 2. பிரபுகள், வழக்கறிஞர்கள், பணம் படைத்த வர்த்தகர்கள், 3. வணிகர்கள், வங்கியாளர்கள், நிலவுடைமையாளர்கள் அடங்கிய பொதுமக்கள்.மூன்றாவது வர்க்கத்தைச் சேர்ந்த அதாவது பொது மக்களின் பிரதிநிதிகள் பிரபுகளுக்குத் தலை வணங்கவும் அரசரின் ஆணைகளுக்குப் பணியவும் மறுத்தனர். மூன்று சபை உறுப்பினர்களும் தனித்தனியாக கூடினர். பொதுமக்கள் பிரிவினர் தங்களைத் தேசியச் சட்டமன்றமென அறிவித்து டென்னிஸ் விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடினர். ஓர் அரசியல் அமைப்பை வழங்க வேண்டும் என அவர்கள் வற்புறுத்தினர். எனவே 16ம் லூயி நாடாளுமன்றமான ஸ்டேட்ஸ் ஜெனரலை கூட்டினார்.

6. பிரெஞ்சு புரட்சியில் லஃபாயட்டின் பங்கினை எழுதுக

பிரெஞ்சு புரட்சியின் முன்னோடியாக வாஷிங்டனுடன் கூட்டுச் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக லஃபாயெட் போராடினார். அமெரிக்க விடுதலைப் போரில் பங்கேற்ற லஃபாயட் போன்ற பிரெஞ்சு வீரர்கள் மக்களாட்சி கோட்பாடுகளோடு நாடு திரும்பி பிரெஞ்சுப் புரட்சியில் முக்கிய பங்கு வகித்தனர்.

7. பாஸ்டில் சிறைச்சாலை தகர்ப்பிற்கான பின்னணி என்ன?

அரசரால் வெளியேற்றப்பட்ட சாதாரண மக்களின் பிரதிநிதிகள் டென்னிஸ் மைதானத்தில் ஒன்று கூடி தங்கள் பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கும் வரை கலைந்து செல்வதில்லை என்று உறுதி ஏற்றனர். 16 ஆம் லூயி அரசர் அவர்களைக் கலைக்கப் படைகளைப் பயன்படுத்த முயன்றார். அரசருடைய ஆணைகளுக்கு வீரர்கள் அடிபணிய மறுத்தனர். இதனால் அயல்நாட்டுப் படைகளைக் கொண்டு அவர்களை அடக்க அரசர் 16 – ஆம் லூயி அடக்க ஆலோசனையில் ஈடுபட்டார். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் பாரிஸ் நகரில் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அவர்கள் பாஸ்டில் சிறையை தகர்த்து அங்கே சிறை வைக்கப்பட்டிருந்தவர்களை விடுதலை செய்தனர். பாஸ்டில் சிறையின் வீழ்ச்சி புரட்சியில் முக்கிய திருப்பு முனையாக அமைந்தது.

8. பிரெஞ்சு புரட்சியின்போது விவசாயிகள் செலுத்த வேண்டிய வரிகள் யாவை?

விவசாயிகள் அரசுக்கு டெய்லே என்ற நிலவரியும், காபெல்லே என்ற உப்பு வரி டித் என்ற சமய வரியையும் செலுத்தினர். மேலும் சாலைகள் அமைத்தல் போன்ற பொதுப் பணிகளுக்கு "கார்வி" எனப்படும் இலவச உழைப்பையும் வழங்கினர்.

5. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி

1. டவுன்ஷெண்ட் சட்டம்

அ) இச்சட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?

இச்சட்டத்தை அறிமுகப் படுத்தியவர் சார்லஸ் டவுன்ஷெண்ட்

ஆ) எந்த ஆண்டு இச்சட்டம் கெகாண்டுவரப்பட்டது?

1767 – ஆம் ஆண்டு

இ) குடியேற்ற மக்கள் இச்சட்டத்தை ஏன் எதிர்த்தனர்?

டவுன்ஷெண்ட் 1767 இல் இறக்குமதிப் பண்டங்களின் மீதான புதிய வரிகளை அறிமுகம் செய்தார்.

ஈ) பாஸ்டன் வணிகர்கள் ஆங்கிலேய பொருட்களை ஏன் எதிர்த்தனர்?

பாஸ்டனைச் சார்ந்த வணிகர்கள் இங்கிலாந்துப் பொருட்களைப் புறக்கணிக்கும் வகையில் இறக்குமதி செய்வதில்லை என முடிவு செய்தனர்.

2. பிரான்ஸின் சமூக நிலை

அ) பிரான்ஸில் திருச்சபை வசூலித்த வரியின் பெயர் என்ன?

டித் என்னும் சமய வரி

ஆ) டான்டன் என்பவர் யார்?

டான்டன் பிரெஞ்சுப் புரட்சியின் மாபெரும் தலைவர். ஐரோப்பிய நாடுகளுக்கு நேரடிச் சவால் விடுத்தார். கில்லட்டினுடைய படிகளில் ஏறி நின்று கொண்டு கூடியிருந்த மக்களிடையே டான்டன் உரையாற்றினார்.

இ) பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸின் கலைக்களஞ்சியச் சிந்தனையாளர்கள் யாவர்?

தீதரா, ஜீன்-டி ஆலம்பெர்ட்

ஈ) பொதுச் சாலைகளின் கட்டுமானத்திற்கான இலவச உழைப்பை வழங்கியவர் யார்?

விவசாயிகள்

2. தொழிற்புரட்சி

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உற்பத்தி முறையில் மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டது. பொருட்கள் இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்பட்டன. இயந்திரங்களின் மூலம் பொருட்களின் உற்பத்தி பன்மடங்க அதிகரித்தது. தொழில் புரட்சி முதலில் இங்கிலாந்தில் தோன்றி பின்பு உலக நாடுகளில் பரவியது. இயந்திரங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்கள் தரம் வாய்ந்ததாக இருந்தன. இங்கிலாந்தின் அரசவம்சம் அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு அதிக ஊக்கமளித்தது. இதனால் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வளர்ச்சி அடைந்தன.

ஜேம்ஸ்வாட் என்பவர் நீராவி இயந்திரத்தினை சுழலும் நீராவி இயந்திரமாக மாற்றி அமைத்தார். ஜான்கே என்பவர் பறக்கும் நாடாவைக் கண்டுபிடித்தார். நீர்ச்சட்டகத்தை ரிச்சார்ட் ஆர்க்ரைட் கண்டுபிடித்தார். கிராம்ப்டன் ஸ்பின்னிங் மியூல் என்ற நூற்பு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். 1793ல் எலிவிட்னி என்பவர் காட்டன் பருத்திக் கொட்டையை நீக்கும் ஜின் என்னும் கருவியைக் கண்டுபிடித்தார்.

ஜவுளி உற்பத்தி தொழிற்புரட்சியின் இதயமாகத் திகழ்ந்தது. மான்செஸ்டர் நகரம் முக்கியத் தொழில் நகரமாக விளங்கியது. இரும்பும் எஃக்கும் தொழில் மயமாக்கச் செயல்முறையை விரைவுபடுத்தின. காலப்போக்கில் இரும்பு, எஃகு ஆகிய இரண்டும் அனைத்து இயந்திர நாடுகள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்பட்டன. தொழில் புரட்சி எரிபொருளை அவசியமாக்கியது. சர்ஹம்பரிடேவியால் கண்டுபிடிக்கப்பட்ட பாதுகாப்பு விளக்கினால் சுரங்கங்களினால் ஏற்படும் அபாயம் தடுக்கப்பட்டது. போக்குவரத்தும் நவீனமாக்கப்பட்டது. 1825ல் இங்கிலாந்தில் ஸ்டாக்டன், டார்லிங்டன் ஆகிய நகரங்களுக்கு இடையே ரயில்பாதை அமைக்கப்பட்டது. ராபர்ட் ஃபுல்டன் என்பவர் கிளார்மோண்ட் என்ற நீராவிப் படகினைக் கண்டுபிடித்தார்.

தொழிற்புரட்சியினால் வணிக விரிவாக்கம், உணவு உற்பத்தி அதிகரிப்பு தொழிலாளர் என்ற புதிய வர்க்கம் உருவாதல் நகரமயமாதல் போன்றவைகள் நடைபெற்றன. தொழில் நகரங்களில் மக்கள் தொகை அதிகரித்தது.

தொழிலாளர் வர்க்கத்திற்காக கார்ல்மார்க்ஸ் பொதுவுடைமை கோட்பாட்டினை முன் வைத்தார். இதனால் தொழிலாளர்களிடையே பல கோரிக்கைகள் எழுந்தன.

பிரான்சில் பிரான்ஸ்வா டி வெண்டல் என்பவர் பிரிட்டிஷ் தொழில் நுட்பத்தை லொரைனுக்கு கொண்டு வந்தார். பிரான்ஸ் நாட்டின் செயின்ட் இடியன் – ஆந்திரிஜியோக்ஸ் ஆகிய நகரங்களுக்கிடையே முதல் பிரெஞ்சு ரயில் பாதை திறக்கப்பட்டது. 1898 ல் ரெனால்ட் என்பவர் நான்கு சக்கர வாகனத்தை உருவாக்கினார்.

தொழிற்புரட்சிக்கு உருவாவதற்குத் தேவையான இயற்கை வளங்கள் ஜெர்மனியில் இயற்கையாகவே அமைந்திருந்தன. ஜெர்மனியில் தொழிற்புரட்கி உருவாவதில் ஜெர்மனி ஒரே நாடாக இணைவதிலும் இருப்புப் பாதைகள் பெரிதும் உதவின. அமெரிக்காவில் நீராற்றலின் மூலம் இயங்கிய முதல் ஜவுளி ஆலை பிரௌன் ஆலைதான். ஆண்ட்ரூ ஜாக்சன், சிலேட்டரை அமெரிக்கத் தொழிற்

புரட்சியின் தந்தை என்று அழைக்கப்பட்டார். எலியாஸ்ஹாவே என்பவர் தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். 1869ல் கண்டங்களை இணைக்கும் ரயில் பாதை அமைக்கப்பட்டது.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. நீராவி படகுப் போக்குவரத்துச் சேவையை நிறுவியர் யார்?

அ) ஆர்க்ரைட் ஆ) சாமுவேல் கிராம்ப்டன்

இ) ராபர்ட் ஃபுல்டன் ஈ) ஜேம்ஸ் வாட்

2. மான்செஸ்டர் நகரம் ஏன் ஜவுளி உற்பத்திக்கு உகந்த இடமாக கருதப்பட்டது?

அ) நிலம் கிடைக்கப் பெற்றமை ஆ) மிகுந்த மனித வளம்

இ) நல்ல வாழ்க்கைச் சூழல் **ஈ) குளிர்ச்சியான தட்பவெப்ப நிலை**

3. தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

அ) எலியாஸ் ஹோவே ஆ) எலி – விட்னி

இ) சாமுவேல் கிராம்டன் ஈ) ஹம்ப்ரி டேவி

4. நீராவி இயந்திரத்தை பிரான்சில் அறிமுகம் செய்த குடும்பம் எது?

அ) டி வெண்டெல் ஆ) டி ஹிண்டல்

இ) டி ஆர்மன் ஈ) டி ரினால்ட்

5. சிலேட்டரை அமெரிக்கத் தொழில் புரட்சியின் தந்தை என அழைத்தவர் யார்?

அ) எப்.டி.ரூஸ்வெல்ட் **ஆ) ஆண்ட்ரூ ஜேக்சன்**

இ) வின்ஸ்டன் சர்ச்சில் ஈ) உட்ரோ வில்சன்

6. கீழ்க் காண்பனவற்றில் எது ஹே மார்க்கெட் நிகழ்ச்சியின் நினைவுநாளாகக் கடைபிடிக்கப்படுகிறது?

அ) சுதந்திர தினம் ஆ) உழவர் தினம்

இ) உழைப்பாளர் தினம் ஈ) தியாகிகள் தினம்

7. எங்கு ஜோல் வெரெய்ன் சுங்க ஒன்றியம் உருவாக்கப்பட்டது?

அ) இங்கிலாந்து **ஆ) ஜெர்மனி**

இ) பிரான்ஸ் ஈ) அமெரிக்கா

8. பிரான்சில் முதல் மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்தவர் யார்?

அ) லூயி ரெனால்ட் **ஆ) ஆர்மாண்ட் பீயுஜ்காட்**

இ) தாமஸ் ஆல்வா எடிசன் ஈ) மெக் ஆடம்

9. எக்கண்டுபிடிப்பு பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித்தது?

அ) உருட்டாலைகள் **ஆ) பஞ்சுக் கடைசல் இயந்திரம்**

இ) ஸ்பின்னிங் மியூல் ஈ) இயந்திர நூற்புக் கருவி

10. கீழ்க்காண்பனவற்றில் எது இரும்பை உருக்குவதற்காக முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டது?

அ) கற்கரி ஆ) கரி

இ) விறகு ஈ) காகிதம்

2. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. **சாசன இயக்கம்** இங்கிலாந்தில் ஆடவர்க்கு வாக்குரிமை கோரியது.

2. **ஜான்லவுடன் மெக் ஆடம்** உலகம் முழுவதும் சாலைகள் அமைக்கப்படும் முறையை மாற்றியமைத்தது.

3. விடைவாகவும் குறைந்த செலவிலும் எஃகை உற்பத்தி செய்யும் முறையை **ஹென்றி பெஸ்ஸிமர்** கண்டுபிடித்தார்.

4. விஞ்ஞான சோசலிஸத்தை முன்வைத்தவர் **கார்ல் மார்க்ஸ்** ஆவார்.

5. ஜெர்மனியில் முதல் இருப்புப்பாதை **1835 ஆம்** ஆண்டில் இயக்கப்பட்டது.

3. பொருத்துக

				விடை
1. பென்ஸ்	-	அமெரிக்கா	-	ஜெர்மனி
2. பாதுகாப்பு விளக்கு	-	லூயி ரெனால்ட்	-	ஹம்பரி டேவி
3. நான்கு சக்கர வாகனம்	-	ஹம்பரி டேவி	-	லூயி ரெனால்ட்
4. மாபெரும் ரயில்வே ஊழியர் போராட்டம்	-	லங்காஷையர்	-	அமெரிக்கா
5. நிலக்கரி வயல்	-	ஜெர்மனி	-	லங்காஷையர்

4. சரியான கூற்றினைக் கண்டுபிடிக்கவும்

1. (i) இங்கிலாந்துச் சுரங்க முதலாளிகள் சுரங்கங்களுக்குள் நீர்க்கசிவு ஏற்படும் பிரச்சனையை எதிர்கொண்டனர்.

(ii) இவ்வேலையில் மனித உழைப்பை ஈடுபடுத்துவது குறைவான செலவுடையாக இருக்கும்.

(iii) சுரங்கங்களிலிருந்து நீரை வெளியேற்றும் நீராவி இயந்திரத்தை நியூட்டன் கண்டுபிடித்தார்.

(iv) சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைப் பெறவேண்டுமானால் நீரை வெளியேற்றியாக வேண்டும்

அ) (i) சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி

இ) (i) மற்றும் (iv) சரி ஈ) (iii) சரி

2. (i) தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காகத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களை உருவாக்கிக் கொண்டனர்.

(ii) ஜெர்மனியின் அரசியல் முறை தொழிற்புரட்சிக்குக் குறிப்பிடத்தக்க முக்கியச் சவாலாக அமைந்திருந்தது.

(iii) முதலாளிகளைப் பாதுகாப்பதற்காகக் கார்ல் மார்க்ஸ் சோசலிஸத்தை முன்வைத்தார்.

(iv) ஜெர்மனியில் இயற்கை வளங்கள் ஏதுமில்லை.

அ) (i) சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி

இ) (i) மற்றும் (iv) சரி ஈ) (iii) சரி

விடை: (i) மற்றும் (ii) சரி

3. கூற்று : விடுமுறை பெறுவதற்குத் தொழிலாளர் உரிமை பெற்றிருந்தனர்.

காரணம் : பணியாளர்களைப் பாதுகாக்கச் சட்டங்கள் இருந்தன.

அ) கூற்று சரி, காரணம் தவறு

ஆ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

இ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.

ஈ) கூற்று சரி காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமல்ல

4. கூற்று : சிலேட்டர் அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

காரணம் : அவருடைய நூற்பாலையின் நகலாகப் பல நூற்பாலைகள் உருவாயின. அவருடைய தொழில் நுட்பம் பிரபலமானது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.

ஆ) கூற்று தவறு, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

ஈ) கூற்று, காரணம் இரண்டுமே சரி

5. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள எல்லாக் கேள்விகளுக்கு விடையளிக்கவும்

1. தொழிலாளர் இயக்கம்

அ) தொழிலாளர் அமைப்புகள் உருவாவதைத் தடை செய்த சட்டம் எது?

கூட்டுச் சட்டம்

ஆ) சொத்துக்கள் உடைய மத்திய தரவர்க்கத்திற்கு வாக்குரிமை வழங்கிய மசோதாவின் பெயர் என்ன?

சாசன இயக்கம்.

இ) தொழிலாளர் இணைவதைத் தடை செய்யும் சட்டம் எந்த ஆண்டு ரத்து செய்யப்பட்டது?

1824 – ல்

ஈ) பாசனவாதிகளின் கோரிக்கைகள் யாவை?

(i) 21 வயதான அனைவருக்கும் வாக்குரிமை

ii) ரகசிய வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத் தேர்தல்.

iii) நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தகுதியில் சொத்துரிமையை நீக்குதல்.

iv) ஆண்டுதோறும் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல்

v) சமமான பிரதிநிதித்துவம்

2. போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பம்

அ) இங்கிலாந்தில் முதன்முதலாகத் திறக்கப்பட்ட இருப்புப்பாதை எது?

ஸ்டாக்டன் – டார்லிங்டன், 1825 ஆம் ஆண்டு

ஆ) உற்பத்திப் பண்டங்கள் எவ்வாறு சந்தைக்கு எடுத்துச் செல்லப்பட்டன?

மெக் ஆடமைஸ்டு சாலை முறையும், ஜார்ஜ் ஸ்டீபன்சனின் நீராவி இயந்திர ரயில்களும் இங்கிலாந்தில் சாலை, போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தின. இதனால் உற்பத்திப் பண்டங்கள் சந்தைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இ) நீராவி இயந்திர ரயிலைக் கண்டுபிடித்தவர் யார்?

ஜார்ஜ் ஸ்டீபன்சன்

ஈ) நியூயார்க்கிலிருந்து ஆல்பனி வரை சென்ற நீராவிப் படகின் பெயரினை எழுது.

கிளார்மோண்ட்

6. சிறுவினாக்கள்

1. தொழிற்புரட்சியின் போது இங்கிலாந்தில் தொழிலாளர்களின் வாழ்விடங்களின் நிலை எவ்வாறு இருந்தன?

சுரங்கங்களில் வேலை செய்வதர்களுக்கு 12 மணி நேரம் உழைக்க 2 பென்னி மட்டுமே கூலியாகத் தரப்பட்டது. பெண் சிறுமிகள் நிலக்கரிக் கூடைகளைச் சுமக்க அமர்த்தப்பட்டனர். ஆரம்ப காலங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மோசமாக இருந்தன. இயந்திரங்களினால் பலர் காயம் அடைந்து மரணம்கூட நிகழ்ந்தது. தொழிலாளர்கள் சிறிய அழுக்கடைந்த, சுகாதாரமற்ற வீடுகளில் வாழ்ந்தனர். சுற்றுப்புறம் தூய்மையாக இல்லை. இதனால் டைஃபாய்டு, காலரா, பெரியம்மை போன்ற நோய்கள் பரவின. வார விடுமுறையோ, உடல் நலம் குன்றியபோதோ விடுப்போ கிடையாது. குறைந்த கூலியில் மொத்த குடும்பமும் தொழிற்சாலைகளில் உழைக்க நேர்ந்தது.

2. இங்கிலாந்தில் நகரமயமாதலுக்கான காரணங்களைக் கூறு

தொழிற்புரட்சியினால் கிராமப் புறங்களிலிருந்து நகரப்புறங்களில் மக்கள் இடம் பெயர்ந்தனர். சிறிய நகரங்கள் பெருநகரங்களாகின. 1840 இல் 20 லட்சமாக இருந்த லண்டனின் மக்கள் தொகை 40 ஆண்டுகளில் 50 இலட்சமாக உயர்ந்தது. மான்செஸ்டர் நகரம் ஜவுளி உற்பத்திக்கு முதலிடம் வகித்தது. ஜவுளி உற்பத்தித் தொழிலின் தலைநகரமாக மான்செஸ்டர் மாறியது. இது ஏராளமான மக்களை மான்செஸ்டர் நகரை நோக்கி ஈர்த்தது. அதனால் இந்நகரில் மக்கள் தொகை அதிகரித்தது.

3. ஹே மார்க்கெட் படுகொலை பற்றிக் குறிப்பு வரைக

சிகாகோவின் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் 1866 ஆண்டு மே மாதம் 4 ஆம் தேதி ஒரு தொழிலாளர் ஆர்ப்பாட்டம் நடந்தது. நாளொன்றுக்கு எட்டுமணி நேர வேலை கோரிக்கையை முன் வைத்தது அமைதியாகத் தொடங்கிய இக்கூட்டத்தில் காவல்துறை பல சுற்றுகள் துப்பாக்கிச் சூடு நடத்தி பலரை

சுட்டுக் கொன்றது. ஹேமார்க்கெட் தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மே 1 ஆம் நாள் இன்றளவும் சர்வதேச தொழிலாளர் நாளாக மே தினம் கொண்டாடப்படுகிறது.

4. லூயி ரெனால்ட் பற்றி நீங்கள் அறிந்தது என்ன?

லூயி பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். 1898ல் லூயி ரெனால்ட் நான்கு சக்கர வாகனத்தை உருவாக்கினார். அவரது சகோதரர்களான சொசைட்டெ ரெனால்ட் ஃபெரரஸ் ரெனால்ட் சகோதரர்கள் நிறுவனம் தனது நிறுவனத்தின் மூலம் அதிக வாகனங்களை தயாரித்தனர்.

5. தொழிற்புரட்சியின் இரு முக்கிய விளைவுகளைக் கோடிட்டுக் காட்டுக

தொழிற்புரட்சி வணிக விரிவாக்கம், உணவு உற்பத்தி அதிகரிப்பு, ஆலைத் தொழிலாளர்கள் எனும் ஒரு புதிய வர்க்கம் உருவாதல், நகரமயமாக்கம் ஆகிய வளர்ச்சிக்கும் போக்குகளுக்கும் இட்டுச் சென்றன. குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் வேலைவாய்ப்புகள் பெற தொழிற்புரட்சி உதவியது.

3. ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம்

காலனியாதிக்கம் என்பது ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமை கொண்டு மேலாதிக்கம் செய்வதாகும். காலனி என்னும் சொல் “கலோனஸ்” என்னும் லத்தீன் வேர்ச் சொல்லிருந்து பிறந்ததாகும். ஐரோப்பாவில் உள்ள நாடுகள் ஆசியா ஆப்பிரிக்கா கண்டங்களில் உள்ள நாடுகளை தன் வசமாக்கிக் கொண்டன. போர்ச்சுக்கல், ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் உலகில் பல நாடுகளை கைப்பற்றி ஆட்சி செய்தன. அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் குடியேறி ஆதிக்கம் செலுத்தினர். 1898ல் கியூபாவுக்கு எதிரான போரில் ஸ்பெயினை அமெரிக்கா தோற்கடித்தது. அதன் விளைவாகப் பிலிப்பைன்ஸ் அமெரிக்காவின் காலனியானது.

ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்காவின் மீது படையெடுத்து கைப்பற்றிக் காலனிகளை ஏற்படுத்திக் கொண்டன. தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயர் நேட்டால், கேப் காலனி ஆகிய பகுதிகளைப் பெற்றிருந்தனர். ஆப்பிரிக்காவில் உள்ள போயர்களுடன் ஆங்கிலேயர்கள் போரிட்டனர். போயர்கள் காவலில் வைக்கப்பட்டனர். மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளில் ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்பட்டது. மேற்கு ஆப்பிரிக்காவில் செனகல் என்ற நாடு பிரான்சின் தளமாக இருந்தது. காங்கோவில் பெல்ஜிய நாட்டில் ஆதிக்கம் ஏற்பட்டது. ஆங்கிலேயர் கென்யா, உகாண்டா, ஜான்ஜிபார் ஆகியவற்றையும் ஜெர்மானியர் கிழக்கு ஆப்பிரிக்காவையும், போர்ச்சுக்கீசியர் அங்கோலா மொசாம்பிக், போர்த்துக்கீசி. கினி ஆகியவற்றையும் காலனியாக்கியுள்ளது. 15ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் போர்த்துக்கல் இந்தியாவுடன் வணிகத் தொடர்பை நிறுவிய முதல் ஐரோப்பிய நாடானது. 1498 ஆம் ஆண்டு வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு கோழிகோட்டை வந்தடைந்தார்.

இந்தியாவில் இருந்த ஐரோப்பிய சக்திகளிடையே ஏற்பட்ட போர்களில் கர்நாடகப் போர்கள் நடைபெற்றன. தொடக்கத்தில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி சிறிய சக்தியாகவே இருந்தது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி துணி, பட்டு, வண்ணப்பூ வேலைப்பாடுகளுடன் வடிவ

துணிகள் ஆகியவற்றில் வணிகத்தை மேற்கொண்டு பெரும் லாபம் ஈட்டியது. இந்தியத் துணி வகைகள் இங்கிலாந்துக்கும் பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றன. இந்தியத் துணிகள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடை செய்யும் சட்டம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தியாவில் கொள்ளையடிக்கப்பட்ட பணம் இங்கிலாந்தில் தொழிற்புரட்சிக்கு முதலீடு செய்ய உதவியது. இந்தியாவின் குடிசைப் பொருள்கள் இங்கிலாந்தின் இயந்திரப் பொருள்கள் உற்பத்தியுடன் போட்டி போட முடியவில்லை.

இந்தியாவில் அமல்படுத்தப்பட்ட ரயில்கள் மூலம் இங்கிலாந்துப் பொருள்கள் இந்தியாவின் பல பாகங்களுக்கும் சென்றன. காரன்வாலிசு பிரபு இந்தியாவில் நிரந்தர நிலவரித் திட்டத்தைப் புகுத்தினார். பின்பு ரயத்துவாரி முறையை ஆங்கிலேயர்கள் புகுத்தினர். அதன்படி விவசாயி நிலத்தின் உரிமையாளர் ஆவார். அவர் ஆங்கில அரசுக்கு கொடுக்க வேண்டிய நிலவரியை செலுத்திவிடுவார். இம்முறையில் நிலங்கள் முறையாக அளக்கப்பட்டன.

1866 – 67 இல் ஏற்பட்ட ஒடிசா பஞ்சம் அப்பகுதியின் வரலாற்றில் நடைபெற்ற கொடூரமான பஞ்சமாகும். இந்தப் பஞ்சத்தால் மூன்றில் ஒரு பகுதியினர் மடிந்தனர். ஒப்பந்தக் கூலி முறையானது பெற்ற கடனுக்காக உழைப்பை நல்கும் ஒப்பந்த முறை ஆகும். 1843ல் இந்தியாவில் அடிமுறை ஒழிக்கப்பட்டது.

1. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. பிரான்ஸிஸ் லைட் .... பற்றி ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

அ) நறுமணத் தீவுகள் ஆ) ஜாவா தீவு

இ) பினாங்குத் தீவு ஈ) மலாக்கா

2. 1896இல் .... நாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு மலாய் ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்டது.

அ) நான்கு ஆ) ஐந்து

இ) மூன்று ஈ) ஆறு

3. இந்தோ – சீனாவில் மட்டுமே பிரான்சின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியாகும்.

அ) ஆனம் ஆ) டோங்கிங்

இ) கம்போடியா **ஈ) கொச்சின் – சீனா**

4. .... பகுதியில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதானது பெருமன விலான ஆங்கிலேய சுரங்கத் தொழில் செய்வோர் ஜோகன்னஸ்பர்க்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேற வழி வகுத்தது.

அ) டிரான்ஸ்வால் ஆ) ஆரஞ்சு சுதந்திர நாடு

இ) கேப் காலனி ஈ) ரொடீஷியா

5. இந்தியாவுடன் வணிக உறவை நிறுவிக் கொண்ட முதல் ஐரோப்பிய நாட்டினர் ……………………

அ) போர்த்துகீசியர் ஆ) பிரஞ்சுக்காரர்

இ) டேனிஷார் ஈ) டிரான்ஸ்வால்

6. எத்தியோப்பியா இத்தாலியை …………… போரில் தோற்கடித்தது.

அ) அடோவா ஆ) டஹோமி

இ) டோங்கிங் ஈ) டிரான்ஸவால்

7. ஒப்பந்தக் கூலி முறையானது ஒரு வகை ……………………………

அ) ஒப்பந்தத் தொழிலாளர் முறை ஆ) அடிமைத்தனம்

இ) கடனுக்கான அடிமை ஒப்பந்தம் ஈ) கொத்தடிமை

II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. **பெர்லின் குடியேற்ற நாட்டு** மாநாடு ஆப்பிரிக்காவை ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக்கொள்வது எனத் தீர்மானித்தது.

2. வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளின் ஜமீன்தார்களோடு மேற்கொள்ளப்பட்ட தீர்வு **நிரந்தரத் நிலவரித் திட்டம்** என்றழைக்கப்படுகிறது.

3. ஆங்கிலேயரின் வருவாய்க்கு முக்கிய ஆதாரமாகத் திகழ்ந்தது **நிலவரி** ஆகும்.

4. தமிழ் மொழி பேசப்பட்ட பகுதிகளில் **நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள்** வட்டிக்கு கடன் கொடிக்கும் தொழிலில் இருந்தனர்.

3. பொருத்துக

				விடை:
1. லியோபோல்டு	-	எத்தியோப்பியா	-	பெல்ஜியம்
2. மெனிலிக்	-	வியட்நாம்	-	எத்தியோப்பியா
3. சிசல் ரோடெஸ்	-	பெல்ஜியம்	-	கேப் காலனி

4. வங்காளப் பஞ்சம் - கேப் காலனி - 1770

5. போ தெய் - 1770 - வியட் நாம்

4. சரியான கூற்றினைக் கண்டுபிடிக்கவும்

1. i) 19ஆம் நூற்றாண்டின் கடைசிக் காலாண்டுப் பகுதிவரை சகாராவுக்குத் தெற்கேயிருந்த ஆப்பிரிக்கா வெளியுலகுக்கு தெரியாமல் இருந்தது.

ii) 1864ஆம் ஆண்டில் கோல்டு கோஸ்டில் அமைத்துள்ள கடற்கரைப் பகுதி நாடுகள் இங்கிலாந்தின் காலனிகளாயின.

iii) 500 ஆண்டு காலத்திற்கும் மேலாக ஸ்பெயின் பிலிப்பைன்ஸை ஆட்சி செய்தது.

iv) ஒடிசா பஞ்சம் 1876 – 78 இல் நடைபெற்றது.

அ) i) சரி ஆ) ii) சரி

இ) ii) மற்றும் iii) சரி ஈ) iv) சரி

2. i) 1640இல் பிரெஞ்சுக்காரர்கள் ஜாவாவையும் சுமத்ராவையும் கைப்பற்றினர்.

ii) மலாக்காவைக் கைப்பற்றியதின் மூலம் ஆங்கிலக் குடியேற்றங்களைக் கைப்பற்றும் பணியை டச்சுக்காரர் தொடங்கினர்.

iii) காங்கோ ஆற்றின் வடிநிலத் தீரத்தோடு தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் பேசித் தீர்ப்பதற்காகவே பெர்லின் மாநாடு கூடியது.

iv) சுல்தான் ஜான்ஜிபாரின் பகுதிகள் பிரான்சு மற்றும் ஜெர்மனியின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன.

அ) i) சரி ஆ) i) மற்றும் ii) சரி

இ) iii) சரி ஈ) iv) சரி

3. கூற்று : சென்னை மகானத்தில் 1876 – 1878 ஆண்டுகளில் நிலவிய பஞ்சத்திற்கு முன்னர் பெரும் வறட்சி நிலவியது.

காரணம் : காலனியரசு உணவுதானிய வணிகத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியது.

அ) கூற்றி சரி, காரணம் தவறு

ஆ) கூற்று காரணம் இரண்டுமே தவறு

இ) கூற்று சரி, காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமல்ல.

ஈ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.

4. கூற்று : பெர்லின் மாநாடு இரண்டாம் லியோபோல்டை சுதந்திர காங்கோ நாட்டில் ஆட்சி செய்ய அனுமதி வழங்கியது.

காரணம் : பெல்ஜியம் அரசர் இரண்டாம் லியோபோல்டு காங்கோவின் மீது அக்கறை கொண்டிருந்தார்.

அ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு, காரணம் சரி

6. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கவும்

1. இந்தியாவில் காலனி ஆதிக்கம்

அ) கிழக்கிந்தியக் கம்பெனி எப்போது நிலவரி வசூலிக்கும் உரிமையைப் பெற்றது?

கி.பி. 1765 – ல்

ஆ) ஆங்கிலேயர் எப்போது கூர்கர்களை வென்றனர்?

கி.பி. 1816 – ல்

இ) இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியில் அடிமைமுறை எப்பொழுது ஒழிக்கப்பட்டது?

கி.பி. 1843 – ல்

ஈ) கீழை உலகின் லங்காஷையர் என்னும் பெயரைப் பெற்றிருந்த நாடு எது?

இந்தியா (இந்தியாவில் உள்ள பம்பாய்)

2. தென்னாப்பிரிக்கா

அ) தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயருக்குச் சொந்தமான நாடுகள் எவை?

நேட்டால், கேப் காலனி

ஆ) டச்சுக்காரர் கைவசமிருந்த பகுதிகள் எவை ?

டிரான்ஸ்வால், சுதந்திர ஆரஞ்சு நாடுகள்

இ) கேப்காலனியின் பிரதம அமைச்சர் யார்?

சிசில் ரோட்ஸ்

ஈ) போயர் போர்கள் எத்தனை ஆண்டுகள் நடைபெற்றன?

மூன்று ஆண்டுகள்

5. சிறுவினாக்கள்

1. காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் – இரண்டையும் வேறுபடுத்திக் காட்டவும்

காலனியாதிக்கம் : காலனியாதிக்கம் என்பது ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமை கொண்டு மேலாதிக்கம் செய்வதாகும். காலனி என்னும் சொல் 'க்லோனஸ்' என்னும் லத்தீன் வேர்ச் சொல்லிருந்து பிறந்ததாகும் இதன் பொருள் விவசாயி என்பதாகும். காலனியாதிக்கம் என்பது மக்களை ஒரு புதிய இடத்தில் குடியேற்றுவது. குடியேறியவர்கள் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி வாழ்வர். ஆனால் நாட்டின் மீது அரசியல் விசுவாசம் கொண்டிருப்பர்.

ஏகாதிபத்தியம்: ஏகாதிபத்தியம் என்பது தன்னைச் சார்ந்திருக்கும் பகுதியின் அரசியலையும் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்துவதாகும். ஏகாதிபத்தியம் என்பது இம்பீரியம் என்னும் லத்தீன் மொழியிலிருந்து பிறந்தது. ஆதிக்கம் செய்தல் என்ற சொல் ஒரு நாடு குடியேறுதல் மூலமாகவோ, இறையாண்மை செலுத்துதல் மூலமாகவோ, மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் வழிகளிலோ வேறொரு நாட்டின் மீது அதிகாரம் செலுத்துவதைக் குறிக்கும்.

2. ஜீலு பூர்வகுடிகள் பற்றிச் சிறு குறிப்பு வரைக

ஜீலு பூர்வீககுடிகள் தங்களின் போர்த் திறனுக்காகப் பெயர் பெற்றவர்கள். புகழ் பெற்ற போராளிகளான சாக்க ஜீலு மக்களுக்கென ஒரு பெரிய நாட்டை உருவாக்குவதில் சாக்கா ஜீலு முக்கியப் பங்காற்றினர். ஜீலு பகுதிகளைக் கைப்பற்றிய ஆங்கிலப் படைகள் அப்பகுதிகளைப் பதிமூன்று தலைமைபுரிமைப் பகுதிகளாகப் பிரித்தனர். ஜீலுக்கன் தங்கள் அதிகாரத்தை மீண்டும் பெறவே இல்லை. அவர்கள் தென்னாப்பிரிக்காவில் இனப்பாகுபாட்டிற்கு எதிராக ஒரு நூற்றாண்டு காலம் போராட நேர்ந்தது.

3. இந்தியப் பொருளாதாரம் காலனிமயமாக்கப்பட்டதின் மூன்று கட்டங்களைக் கூறுக.

முதல் கட்டம் : வணிக முதலாளித்துவம்

இரண்டாம் கட்டம் : தொழில்துறை முதலாளித்துவம்

மூன்றாம் கட்டம் : நிதி மூலதன முதலாளித்துவம்

4. கர்னல் பென்னிகுயிக்

கர்னல் பென்னிகுயிக் ஒர் இராணுவ பொறியாளரும் குடிமைப் பணியாளரும், சென்னை மாகாணச் சட்டமன்ற மேலவை உறுப்பினரும் ஆவார்.

பெரியார் ஆற்றின் நீரை ஓர் அணையைக் கட்டி கிழக்கு நோக்கித் திருப்பினால் இலட்சக்கணக்கான புன்செய் நிலங்களைப் பாசன வசதி பெறும் கொண்டவையாக இலட்சக்கணக்கான புன்செய் நிலங்களைப் பாசன வசதி பெறும் கொண்டவையாக மாற்ற முடியும் என அவர் முடிவு செய்தார். இயற்கையின் சீற்றத்தையும், வன விலங்குகளும், விஷ உயிரினங்கள் ஆகியவற்றின் ஆபத்தினை எதிர்கொண்டு அணையின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டார். ஆங்கிலேய அரசிடமிருந்து போதுமான நிதி கிடைக்கவில்லை. எனவே பென்னிகுயிக் இங்கிலாந்து சென்று தன் குடும்பச் சொத்துகளை விற்று அப்பணத்தில் பெரியார் அணையைக் கட்டினார்.

அணை கட்டும் பணிகள் 1895ல் முடிவுற்றன. பெரியார் அணையிலிருந்து கிடைக்கும் நீர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு பாசன வசதி அளிக்கிறது.

5. தாயகக் கட்டணங்கள் (Home Charges) பற்றி விளக்கவும்.

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் தாயகக் கட்டணம் என்ற பெயரில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு சேர வேண்டிய லாபத்தில் பங்கு, வாங்கிய கடனின் மீதான வட்டி, ஊதியத்திலிருந்து பெறப்பட்ட சேமிப்பு, அதிகாரிகளுக்கான ஒய்வூதியம், லண்டனில் உள்ள இந்திய அலுவலகத்திற்கான செலவுகள் இந்தியாவிற்கு வரும் அல்லது இந்தியாவிலிருந்து செல்லும் ஆங்கிலப் படைகளுக்கான போக்குவரத்து செலவு என்னும் பெயரில் கம்பெனி பெருமளவுப் பணத்தை ஆண்டுதோறும் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தது. இதற்கு தாயகக் கட்டணங்கள் எனப் பெயர்.

புவியியல்

1. மனிதனும் சுற்றுச் சூழலும்

சுற்றுச் சூழல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள தொடர்புகளைப் பற்றியது ஆகும். சுற்றுச்சூழல் என்ற சொல் என்விரான் என்ற என்விரான் என்ற பிரெஞ்சு மொழியிலிருந்து பெறப்பட்டது ஆகும்.சுற்றுச்சூழல் என்ற சொல் என்விரான் என்ற பிரெஞ்சு மொழியிலிருந்து பெறப்பட்டது ஆகும். ஆதிகால மனிதர்கள் தங்களது உணவு, உடை மற்றும் இருப்பிடத் தேவைக்கு இயற்கையையே சார்ந்து இருந்தனர். புதிய கற்காலம் வரை மனிதர்கள் சக்கரம், நெருப்பு, கருவிகள், வேளாண் முறைகள் மற்றும் குடியிருப்புகள் போன்றவற்றைக் கண்டுபிடித்தனர். இதன் காரணமாக இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டு வருகின்றன. சுற்றுச் சூழல் என்பது இயற்கை சுற்றுச்சூழல், மனித சுற்றுச்சூழல், மனிதனால் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் என மூன்று வகைப்படும்.

இயற்கைச் சுற்றுச்சூழல் இயற்கை கூறுகளான நிலக்கோளம், உயிர்க்கோளம், வாயுக்கோளம் மற்றும் உயிர்க் கோளம் ஆகியவற்றைக் கொண்டது. மனித சுற்றுசூழல் என்பது ஒரு மனிதன் அவரது குடும்பம், தொழில் மற்றும் சமூகம் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்புகளை விளக்குவதாகும்.

மனிதனால் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் என்பது மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் தன் வாழ்க்கையை ஏதுவானதாகவும் எளிதானதாகவும் அமைத்துக் கொள்ள உருவாக்கப்பட்டதாகும். பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு மனித இனம் மிக முக்கியமானதாகும். மக்கள் தொகையியல் என்பது புள்ளியல் முறையில் மக்கள் தொகையைக் கணக்கிடுவதாகும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பையே மக்கள் தொகை வளர்ச்சி என்கிறோம். மக்கள் தொகை வளர்ச்சி என்பது பிறப்பு விகிதத்திற்கும் இறப்பு விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகும். மக்கள் தொகையில் மாற்றம் என்பது மக்களின் எண்ணிக்கை ஓரிடத்தில் அதிகரிப்பு அல்லது குறைவதைக் குறிப்பதாகும். குறிப்பிட்ட கால இடைவெளியில் அரசாங்கம் மக்கள் தொகை பற்றிக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

புவியின் மேற்பரப்பில் மக்கள் எவ்வாறு பரவிக் காணப்படுகிறார்கள் என்பதைப் பற்றிக் குறிப்பிடுவதே மக்கள் தொகை பரவல் ஆகும். இயற்கைக் காரணிகள் வரலாற்றுக் காரணிகள், பொருதாரக் காரணிகள் ஆகியன மக்கள் தொகை பரவலுக்கு காரணங்கள் ஆகும். ஒருசதுர கி.மீ நிலப்பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கையை மக்களடர்த்தி என்கிறோம். ஒரு சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில் 50க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்வதை அதிக மக்கள் அடர்த்திப் பகுதி என்கிறோம். ஒரு சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் 10க்கும் குறைவான மக்கள் வாழ்வதைக் குறைந்த மக்கள் அடர்த்திப் பகுதி என்கிறோம்.

இடப்பெயர்வு என்பது நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நிகழ்வதாகும். உள்நாட்டு இடப்பெயர்வு, பன்னாட்டு இடப்பெயர்வு என இரண்டு வகைகளில் இடப்பெயர்ச்சி நடைபெறுகிறது. கிராமக் குடியிருப்புகள் , செவ்வக வடிவக் குடியிருப்புகள் மூலக்கருவடிவக் குடியிருப்புகள் என குடியிருப்புகளை வகைப்படுத்தலாம். காற்று மாசுறுதல், நீர், மூலக்கூறுகள், குளோரோபுளோரோ கார்பன், கார்பன் மோனாக்சைடு மற்றம் ஹைட்ரோ கார்பன் போன்றவை வளிமண்டலத்திலிருந்து வெப்பத்தை வெளிறேற்றாமல் தக்க வைக்கின்றன.

ஓசோன் படலம் சூரியனிடமிருந்து வரும் தீங்கு விளைவிற்கும் புற ஊதாக்கதிர்களை ஈர்த்துக் கொள்கிறது. நிலப்பரப்பில் உள்ள கழிவுகளை ஈரக் கழிவுகள், வறண்ட கழிவுகள், உயிர்க் கழிவுகள் கழிவுச்சேறு, மின்னக் கழிவுகள் என வகைப்படுத்தலாம். வளம் குன்றா வளர்ச்சி என்பது எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளுக்கான வள இருப்பை உறுதி செய்வதோடு நிகழ்காலத் தேவையையும் பூர்த்தி செய்து கொள்வதாகும்.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. வாழும் உயிரினங்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தைப் பாதிக்கக்கூடிய காரணிகள் மற்றும் அனைத்து வெளிப்புறச் செல்வாக்குகளை ……………… என்கிறோம்.

அ) சுற்றுச்சூழல் ஆ) சூழலமைப்பு

இ) உயிர்க் காரணிகள் ஈ) உயிரற்றக் காரணிகள்

2. ஒவ்வோர் ஆண்டும் உலக மக்கள் தொகை தினம் .... ஆம் நாள் கடைபிடிக்கப்படுகிறது.

அ) ஆகஸ்டு 11 ஆ) செப்டம்பர் 11

இ) ஜீலை 11 ஈ) ஜனவரி 11

3. மக்கள் தொகை பற்றி புள்ளியியல் விவரக் கல்வி .... ஆகும்.

அ) மக்கள்தெகையியல் ஆ) புற வடிவமைப்பியல்

இ) சொல்பிறப்பியல் ஈ) நிலநடுக்கவரைவியல்

4. விலை மதிப்புமிக்க கனிமங்கள் மற்றும் பிற புவி அமைப்பியல் கனிமங்களைச் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுப்பது .... ஆகும்.

அ) மீன்பிடித்தல் ஆ) மரம் வெட்டுதல்

இ) சுரங்கவியல் ஈ) விவசாயம்

5. பொருளாதார நடவடிக்கையில் இரண்டாம் நிலைத் தொழிலில் மூலப்பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுவன ....

அ) பாதி முடிக்கப்பட்ட பொருள்கள் **ஆ) முடிக்கப்பட்ட பொருள்கள்**

இ) பொருளாதார பொருள்கள் ஈ) மூலப்பொருள்கள்

6. வளிமண்டலத்திருள்ள பசுமைக் குடில் வாயுக்களால் படிப்படியாக அதிகரிக்கும் புவி வெப்பத்தை .... என்கிறோம்.

அ) அமிலமழை ஆ) வெப்ப மாசுறுதல்

இ) புவி வெப்பமாதல் ஈ) காடுகளை அழித்தல்

2. <u>கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளைக் கருத்தில் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக</u>

1. உறுதிப்படுத்துதல் (A) : படுக்கை அடுக்கில் உள்ள ஓசோன் படலத்தை பாதுகாப்பு கேடயம் என்கிறோம்.

காரணம் (R) : புற ஊதாக்கதிர் வீச்சு புவியை அடையாமல் தடுக்கிறது.

அ) Aவும் Rம் சரி மற்றும் A என்பது Rன் சரியான விளக்கம்.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி. ஆனால் A வானது Rன் சரியான விளக்கமல்ல.

இ) A தவறு. ஆனால், R சரி

ஈ) A மற்றும் R இரண்டும் தவறு

2. உறுதிப்படுத்துதல் (A) : மூன்றாம் நிலைத் தொழிலில், பொருள்கள் நேரடியாக உற்பத்தி செய்யப்படாமல் உற்பத்தி செய்வதற்கான செயல்முறைகளில் உறுதுணையாக உள்ளது.

காரணம் (R) : மூன்றாம் நிலைத்தொழில் ஈடுபடும் மக்கள் முழுமையாக சுற்றுச் சூழலுக்குச் சாதகமாகச் செயல்படுகிறார்கள்.

அ) A மற்றும் R இரண்டும் தவறு

ஆ) A மற்றும் R இரண்டும் சரி. ஆனால் A வானது R க்கு விளக்கம் தரவில்லை

இ) A சரி. ஆனால் R தவறு

ஈ) A மற்றும் R இரண்டும் சரி.A வானது R க்கு சரியான விளக்கம் தருகிறது.

3. பொருத்துக

				விடை
1. ஒலிபெருக்கி	-	தள்ளு காரணிகள்	-	ஒலி மாசுறுதல்
2. ரியோடி ஜெனிரோ	-	இழு காரணிகள்	-	புவி உச்சி மாநாடு
3. சிலுவை வடிவக் குடியிருப்புகள்	-	ஒலி மாசுறுதல்	-	T வடிவ குடியிருப்பு
4. இயற்கை பேரிடர்	-	T வடிவ குடியிருப்பு	-	தள்ளு காரணிகள்
5. சிறந்த வாழும் சூழல்	-	புவி உச்சி மாநாடு	-	இழு காரணிகள்

4. சிறுவினாக்கள்

1. மக்கள் அடர்த்தி என்றால் என்ன?

ஒரு சதுர சி.மீ நிலப்பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கையை மக்கள் அடர்த்தி என்கிறோம்.

$$\text{மக்களடர்த்தி} = \frac{\text{மொத்த மக்கள் தொகை}}{\text{மொத்த நிலப்பரப்பு}}$$

2. கொள்ளை நோய் என்றால் என்ன?

கொள்ளை நோய் என்பது மக்களை திடீர் என்று தாக்கும் பிளேக், காலரா, பெரியம்மை போன்ற நோய்களாகும். இந்நோய்களினால் ஏராளமான மக்கள் மாண்டு போயினர். 14 ஆம் நுற்றாண்டில் ஐரோப்பாவில் பிளேக் என்ற கொள்ளை நோயால் 30-80 சதவீத மக்கள் இறந்தனர்.

3. அதிக மக்கள் அடர்த்தி மற்றும் குறைந்த மக்களடர்த்தி உள்ள பகுதிகளை எழுதுக

1. மக்கள் அடர்த்தி : ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 50க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்வதை அதிக மக்கள் அடர்த்திப் பகுதி என்கிறோம். கிழக்கு ஆசியா, தெற்கு ஆசியா, வடமேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் கிழக்குப் பகுதி.

2. மிதமான மக்களடர்த்தி : ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 10ல் இருந்து 50 பேர் வரை வசிப்பதை மிதமான மக்களடர்த்தி என்கிறோம். அங்கோலா, காங்கோ, நைஜீரியா மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ள சாம்பியா.

3. குறைந்த மக்களடர்த்திப் பகுதி : ஒரு சதுர கி.மீட்டருக்கு 10க்கு குறைவான மக்கள் தொகை வாழ்வதை குறைந்த மக்கள் அடர்த்திப்பகுதி என்கிறோம். மத்திய ஆப்பிரிக்கா, மேற்கு ஆஸ்திரேலியா, வடக்கு ரஷ்யா மற்றும் கனடா.

4. பசுமை குடில் விளைவு என்றால் என்ன?

பசுமைக்குடில் வாயுக்களான கார்பன் – டை – ஆக்ஸைடு, மீத்தேன், நீர், மூலக்கூறுகள், குளோரோபுளோரோ கார்பன், கார்பன் போன்றவை வளிமண்டலத்திலிருந்து வெப்பத்தை வெளியேற்றாமல் தக்க வைத்துக் கொள்கின்றன. இதனால் புவியின் வெப்பம் அதிகரிக்கிறது. இதையே பசுமைக் குடில் விளைவு என்கிறோம்.

5. பாக் வளைகுடாவை உள்ளூர் மக்களும், அரசாங்கமும் மீட்டெடுத்த வழிமுறைகளில் இரண்டை எழுதுக

1) இப்பகுதிகளில் வளரும் தாவர இனங்களின் நாற்றுகள் நடப்பட்டு கவனமாக வளர்க்கப்படுகின்றன.

2. மன்னர் வளைகுடா பல்லுயிர்த் தொகுதியிலிருந்து முருகைப் பறைகளைக் கொண்டு வந்து பாக்வளைகுடாவில் வளர்த்து, இங்கு எஞ்சியிருக்கும் மாங்குரோவ் காடுகளை வரைபட மாக்குதோடு அதைக் சுற்றியே நிலப்பகுதி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கற்றறியப்படுகிறது. மாங்குரோவ் காடுகளைப் பாதுகாப்பது மற்றும் மீட்டெடுப்பதில் உள்ளூர் அமைப்புகள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். கல்வியறிவும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டியன் அவசியமாகும்.

6. வரையறு

அ) மக்கள்தொகை வளர்ச்சி : ஒருகுறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பையே மக்கள் தொகை வளர்ச்சி என்கிறோம்.

ஆ) குழந்தை இறப்பு வீதம் : ஓர் ஆண்டில் உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளின் ஒரு வயதிற்குட்பட்ட இறந்த குழந்தைகளின் எண்ணிக்கையாகும்.

இ) மக்கள் தொகை கணக்கெடுப்பு : ஒரு குறிப்பிட்ட கால இடைவேளியில் அரசாங்கம் மக்கள் தொகை பற்றிக் கணக்கெடுப்பு நடத்தி தகவல்களைச் சேகரிக்கின்றது. இக்கணக்கெடுப்பு மக்களின் வயது, பாலினம், கல்வியறிவு விகிதம் மற்றும் தொழில் போன்ற விவரங்களைப் பதிவு செய்கிறது.

ஈ) வளம் குன்றா வளர்ச்சி : வளம் குன்றனா வளர்ச்சி என்பது எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளுக்கான வள இருப்பை உறுதி செய்வதோடு நிகழ்காலத் தேவையும் பூர்த்தி செய்து கொள்வதாகும்.

7. வேறுபடுத்துக

(i). பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதம்

பிறப்பு வீதம் : ஒரு ஆண்டில் 1000 பேருக்கு உயிருடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை பிறப்பு வீதம் ஆகும்.

இறப்பு வீதம் : ஒரு ஆண்டில் உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் ஒரு வயதிற்குட்பட்ட இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை இறப்பு வீதமாகும்.

(ii). குடியேற்றம் மற்றும் குடியிறக்கம்

குடியேற்றம் : ஓர் இடத்தில் குடியிருக்கும் மக்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறுவது குடியேற்றம் ஆகும். இறப்பு மற்றும் குடியேற்றம் காரணமாக குடியேற்றங்களில் மக்கள் தொகை குறையும்.

குடியிறக்கம் : குடியிறக்கம் என்பது ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து இருப்பிடத்தை அமைத்துக் கொள்வது குடி இறக்கம் ஆகும். பிறப்பு மற்றும் குடி இறக்கம் காரணமாக மக்கள் தொகை அதிகரிக்கிறது.

(iii) கிராமக் குடியிருப்பு மற்றும் நகரக் குடியிருப்பு

கிராமக் குடியிருப்பு : கிராமத்தின் குடியிருப்புகள் செல்வந்தரின் குடியிருப்பைச் சுற்றியோ அல்லது மசூதி, கோவில், தேவாலயங்களைச் சுற்றியோ அமைந்திருக்கும் இங்குச் சாலைகள் வட்ட வடிவமாகவும் ஒரு மையத்தில் முடிவடையக் கூடியதாகவும் இருக்கும்.

நகரகுடியிருப்பு: நகரம் பொதுவாகக் கிராமத்தை விட பெரியதாகவும், பெருநகரத்தை விடச் சிறியதாகவும் இருக்கும்.

(iv). பெருநகரம் மற்றும் மிகப்பெரு நகரம்.

பெருநகரம்: பெருநகரங்கள் நகரங்களைவிடப் பெரியதாகவும், மிக அதிகப் பொருளாதார நடவடிக்கைகளைக் கொண்டதாகவும் இருக்கும். இஃது ஒரு லட்சத்திருக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கும்.

(உ.ம்) கோயமுத்தூர்

மாநகரம் பத்து லட்சத்திலிருந்து 50 லட்சம் வரையிலான மக்கள் தொகையைக் கொண்டிருக்கும்.

(உ.ம்) மதுரை மாநகரம்

மிகப் பெருநகரம் : மிகப் பெரு நகரம் 50 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் (உ.ம்) சென்னை மாநகரம்

(v). தள்ளு காரணிகள் மற்றும் ஈர்ப்புக் காரணிகள்.

மக்களைப் புதிய வாழ்விடத்தை நோக்கி வலிந்து இடம் பெயரச் செய்யும் காரணிகள் தள்ளுகாரணிகள் எனப்படும். ஈர்ப்பின் காரணமாக புதிய வாழ்விடத்தை நோக்கி மக்கள் இடம் பெயரச் செய்வன ஈர்க்குக் காரணிகள் ஆகும்.

(vi). முதல்நிலைத் தொழில் மற்றும் இரண்டாம் நிலைத்தொழில்

முதல் நிலைத் தொழில்கள் : முதல் நிலைத் தொழில் என்பது மூலப் பொருள்களை பூமியிலிருந்து பயன்பாட்டிற்கு செய்யப்படும் தொழில். இதில் உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், மரம் வெட்டுதல், மீன்பிடித்தல், கால்நடைகளை மேய்த்தல், மரங்களை வெட்டி எடுத்தல் மற்றும் வேளாண்மை செய்தல் ஆகிய தொழில்கள் அடங்கும்.

இரண்டாம் நிலைத் தொழில்கள் : இரண்டாம் நிலைத் தொழிலில் மூலப் பொருள்கள் முடிவுற்ற பொருள்களாக மாற்றம் செய்யப்படுகின்றன.

(எ.கா) இரும்பு, எஃகு தொழிற் சாலைகள், வாகன உற்பத்தி தொழிற்சாலைகள்.

(vii). நீர் மாசடைதல் மற்றும் ஒளி மாசடைதல்

அ) நீர் மாசடைதல் : நீர் மாசுறுதல் என்பது நன்னீரின் தரத்தில் ஏற்படும் வேதியியல், இயற்பியல் மற்றும் உயிரியியல் மாற்றங்களாகும். குளங்கள், ஏரிகள், ஆறுகள், நிலத்தடி நீர் மற்றும் பெருங்கடல்கள் போன்ற நீர் நிலைகள் தொழிற்சாலை இராசயன கழிவுகள், வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் சாக்கடைகள் போன்றவற்றால் நீர் மாசடைகின்றன.

ஆ) நோய்களைப் பரப்பும் காரணிகள் : பாக்டீரியா, வைரஸ், புரோட்டோசோவா, கழிவு நீரின் மூலமும் பரவுகின்றன. ஆக்ஸிஜனை உறிஞ்சும் பாக்டீரியாக்கள் இவை பொருள்களைச் சிதைவுறச் செய்வதன் மூலம் பரவுகின்றன.

நீரில் கரையக்கூடிய மாசுக்கள் : அமிலங்கள், உப்பு மற்றும் நச்சு உலோகங்கள் ஆகியன.

கரிம வேதியியல் பொருட்கள் : எண்ணெய், நெகிழி மற்றும் பூச்சிக் கொல்லிகள்.

இ) ஒளி மாசடைதல் : ஒளி மாசுபாடு என்பது அதிகப்படியான ஒளியினை திறந்த வெளியில் வானம் ஒளிர்தல், ஒளிமீறல் மற்றும் கண்களை உறுத்தும் போன்றவை ஒளி. வாகன நிறுத்துமிட விளக்குகள், அலங்கார விளக்குகள் போன்ற பல்வகைப்பட்ட செயற்கை ஒளி விளக்குகளால் ஒளி மாசுபாடு ஏற்படுகிறது. சக்தி வளங்கள், வன உயிரி வளங்கள், மனிதர்கள் மற்றும் வானவியல் ஆராய்ச்சி போன்றவற்றை இது பாதிக்கிறது.

5. காரணம் கூறுக

1. காடுகளை மீட்டெடுத்தல் உலகம் முழுவதும் ஊக்கப்படுத்தப்படுகிறது.

காடுகள் அழிக்கப்படுவதால் வெள்ளம் மற்றும் வறட்சி, மண் வளம் இழத்தல், காற்று மாசடைதல், உயிரினங்கள் அழிதல், உலகம் வெப்பமாதல், பாலைவனங்கள் விரிவடைதல், நீர் வளம் குறைதல், பனி உருகுதல், கடல் மட்டம் உயருதல் மற்றும் ஓசோன் மண்டலத்திலுள்ள ஓசோன் செறிவு குறைதல் போன்ற பல விளைவுகளை ஏற்பத்துக்கின்றது.

2. அமில மழை சுற்றுச்சூழலை அழிக்கிறது.

அமில மழையால் மண்ணின் அமிலத்தன்மை அதிகரிக்கிறது. இது தாவர வளர்ச்சியைத் தடுப்பதுடன் வேர்கள் அழிந்துவிடக் காரணமாகவும் உள்ளது.

3. நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை ஓர் அறிவுசார் பொருளாதாரம்.

நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கையானது ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, அறிவுசார் செயல்பாடுகளுடன் தொடர்பு கொண்டது. எனவே இது அறிவுசார் பொருளாதாரம் ஆகும்.

4. மக்கள் தொகை வளர்ச்சி கட்டுபாட்டிற்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

மக்கள் தொகை வளர்ச்சியால் இடநெருக்கடியும், நெரிசலும் பூமியில் ஏற்படுகின்றன. நீர், நிலம் போன்ற இயற்கை மூலங்கள் பூமியின் மீது ஒரு குறிப்பிட்ட அளவிலேயே உள்ளன. இவற்றை அதிகரிக்க முடியிது. மக்கள் தொகை வளர்ச்சியால் இவை மிக விரைவாகப் பயன்படுத்தப் படுகின்றன. சுற்றுச் சூழலும் மனிதச் செயல்பாடுகளால் மாசடைந்து உயிர் வாழ்க்கைக்குக் கேடுள்ளதாக மாறிவிடுகிறது. எனவே மக்கள் தொகை வளர்ச்சி கட்டுபாட்டிற்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

5. வளம் குன்றா வளர்ச்சியின் இலக்குகள் புவியைப் பாதுகாப்பதாக இருக்கிறதா?

ஆம். இதனால் நமது நிகழ்காலத் தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன் வருங்காலச் சந்ததிகளின் தேவைக்கான இயற்கை வள ஆதாரங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

2. நிலவரைபடத் திறன்கள்

ஒரு நிலவரைபடம் ஆயிரம் சொற்களுக்குச் சமமானதாகும். நிலவரைப் படங்களின் கூறுகளான அளவை, குறியீடுகள், சின்னங்கள் ஆகும். நில அளவை என்பது அளவீடு செய்து பதிவு செய்யும் முறையாகும். நிலவரைப் படம் ஒரு புவியியலாளரின் அடிப்படைக் கருவி ஆகும். பண்டைய பாபிலோனியர்கள், ரோமானியர்கள் கிரேக்க மற்றும் எகிப்தியர்கள் முதன் முதலாக நிலவரைப் படங்களை உருவாக்கினார்கள். கிரேக்க அறிஞர்கள் நிலவரைப் படங்களை உருவாக்கினார்கள். கிரேக்க மற்றும் எகிப்தியர்கள் முதன் முதலாக நிலவரைப் படங்களை உருவாக்கினார்கள். கிரேக்க அறிஞர்கைள் நிலவரைப் படங்களை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியுள்ளனர். கிரேக்க நாட்டைச் சேர்ந்த அனாக்ஸிமேன்டர் என்பவர் வரைந்த நிலவரைப் படமே உலகின் முதல் நிலவரைப் படமாகும்.

இந்தியாவில் நிலவரைப் படத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் வேத காலத்தின் போது உருவானது. நிலவரைப் படத்திலுள்ள தூரம் மற்றும் புவியின் உண்மையான தூரத்தினை ஒப்பீடு செய்வது சொற்களில் குறிப்பிடுவது சொல்லளவை முறையாகும். பொதுவாக நிலவரைப் படங்கள் வடதிசையை அடிப்படையாகக் கொண்டு வரையப்படுகின்றன. நிலவரைப் படத்தில் வடக்குத் திசை எப்போதும் புவியின் வட துருவத்தை நோக்கியே உள்ளது.

ஓர் இடத்தின் அமைவிடம், அதன் அட்சக்கோடு மற்றும் தீர்க்கக்கோடு மூலம் வரையறுக்கப்படுகிறது. இந்தியாவில் முதன்மை நிலப் பரப்பின் அட்ச தீர்க்கப் பரவல் முதன்மை நிலப் பரப்பின் அட்ச தீர்க்கப் பரவல் முதன்மை நிலப்பரப்பின் அட்ச தீர்க்கப் பரவல் 8°4' தீர்க்கம் வரை. 68°7' கி. முதல் 97°25' தீர்க்கம் வரை உள்ளது. புவியின் உண்மையான வடிவம் ஜியாய்டு எனப்படுகிறது. நிலவரைபட விவரங்களைப் புரிந்து கொள்ள உதவும் நிலவரை படக் குறிப்பு பொதுவாக நிலவரைப் படத்தின் கீழே இடது அல்லது வலது மூலையில் குறிக்கப்பட்டிருக்கும். ஒரு நிலவரைப் படம் உலகளாவிய மொழியாகும். முறைக்குறியீடுகள் மூன்று வகைப்படும்.

1. புள்ளி குறியீடுகள் 2. கோட்டுக் குறியீடுகள் 3. பரப்புக் குறியீடுகள். நிலக் குறியீடுகள் பல்வேறு வண்ணங்களில் நிலவரைப் படங்கள் பயன்படுத்தப்படுகின்றன. **பழுப்பு – நிறம்** – நிலம் அல்லது புவி அம்சங்கள்; **வெளிர் நீலம்** – நீர்நிலைகள்; **கருநீலம்** – தேசிய நீர் வழிகள்; **கருப்பு** – கட்டுமான இடங்கள், சாலைகள், இருப்புப் பாதைகள்; **சிவப்பு** – கட்டுமான இடங்கள், தேசிய கிளை மற்றும் முக்கிய சாலைகள்; **இளஞ் சிவப்பு** பன்னாட்டு எல்லைகளைக் குறிக்கும்.

புவியின் மேற்பரப்பில் உள்ள ஓரிடத்தின் கோணம், திசை, பரப்பு, உயரம் மற்றும் தூரம் ஆகியவற்றைக் கருவிகளைப் பயன்படுத்தி அளவீடு செய்வது நில அளவை எனப்படும். தொலை நுண்ணுணர்வு என்பது புவியில் உள்ள பொருட்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளாமல் தொலைவிலிருந்து உற்று நோக்கி அவற்றின் தகவல்களைச் சேகரிப்பதாகும். வான் வழி புகைப்படம் எடுத்தல் என்பது குறைந்த உயரத்தில் பறக்கும், பலூன்கள், ஹெலிகாப்டர்கள், விமானங்கள் மற்றும் ட்ரோன்களில் புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டு எடுக்கப்பட்ட புகைப்படங்களின் மூலம் இடங்கள் அல்லது பொருள்கள் அல்லது நிகழ்வுகள் பற்றிய தகவலை அறியும் முறையைக் குறிக்கிறது.

செயற்கைகோள் தொலை நுண்ணுணர்வு என்பது புவி சுற்றுப்பாதையில் சுற்றி வரும் செயற்கைக் கோள்களிலிருந்து ஒரு பொருள் அல்லது ஒரு பகுதியைப் பற்றி தகவல்களைச் சேகரிக்கும் ஒரு தொழில் நுட்பமாகும். உலக அமைவிட கண்டறியும் தொகுதி புவியின் தகவல் அமைப்பு, ஆகியவை தொலை நுண்ணுணர்வு தொடர்புடைய சாதனங்கள் ஆகும்.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. 20ம் நூற்றாண்டில் தலப்பரப்பு அளவிடுதலின் புதிய நிலை

அ) தலப்படங்கள் ஆ) வானவியல் புகைபடங்கள்

இ) நிலவரை படங்கள் **ஈ) செயற்கைகோள் பதிமங்கள்**

2. ஒரு நிலவரைபடத்தின் கருத்து (அல்லது) நோக்கத்தைக் குறிப்பிடுவது

அ) தலைப்பு ஆ) அளவை

இ) திசைகள் ஈ) நிலவரைபடக் குறிப்பு

3. நிலவரைபடத்தில் உறுதியான கருத்தை வெளிப்படுத்துவதற்குப் பயன்படும் நிரந்தர குறியீடுகள்

அ) முறைக்குறியீடுகள் ஆ) இணைப்பாய புள்ளிகள்

இ) வலைப்பின்னல் அமைப்பு ஈ) திசைகள்

4. மிகப்பிரந்த நிலப்பரப்பில் குறைந்த விவரத்தை தரக்கூடிய நிலவரைபடம்

அ) பெரிய அளவை நிலவரைபடம் ஆ) கருத்துசார் வரைபடம்

இ) இயற்கை வரைபடம் **ஈ) சிறிய அளவை நிலவரைபடம்**

5. உலக அமைவிடத்தை கண்டறியும் தொகுதியில் (GPS) பயன்படுத்தப்படும் செயற்கைக்கோள்கள்

அ) 7 **ஆ) 24** இ) 32 ஈ) 64

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளைக் கருத்தில் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கூற்று (A) : செங்குத்துக் கோடுகளும் இடைமட்டக் கோடுகளும் ஒரு புள்ளியில் சந்திப்பதன் மூலம் உருவாக்கும் வலைஅமைப்பிற்கு இணைப்பாயங்களின் அமைப்பு.

காரணம் (R) : கிடைமட்டமாகவும், செங்குத்தாகவும் செல்லும் கோடுகள் முறையே வடக்கைக் கோடுகள், கிழக்கைக்கோடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

அ) A மற்றும் R இரண்டும் சரி R ஆனது A விற்கு சரியான விளக்கம்.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R ஆனது A விற்கு சரியான விளக்கமல்ல.

இ) A சரி ஆனால் R தவறு

ஈ) A மற்றும் R சரி

2. கூற்று (A) : ஒரு நிலவரைபடத்தில் உள்ள வரைபடக் குறிப்புகள் வரைபடத்தில் உள்ள செய்திகளைப் புரிந்து கொள்ளப் பயன்படாது.

காரணம் (R) : இது பொதுவாக நிலவரைபடத்தின் அடிப்பகுதியில் இடது அல்லது வலது புற ஓரத்தில் காணப்படும்.

அ) A தவறு R சரி

ஆ) A மற்றும் R இரண்டும் சரி. ஆனால் R ஆனது A விற்கு சரியான விளக்கமல்ல

இ) A சரி ஆனால் R தவறு

ஈ) A மற்றும் R இரண்டும் சரி

3. பொருத்துக

1. நிலவரைபடங்களை உருவாக்கும் அறிவியல் கலை	–	அமெரிக்க ஐக்கிய நாடுகள்
2. கருத்துச்சார் வரைபடம்	-	ஜியாய்டு
3. புவியின் வடிவம்	-	இன்மார்சாட்
4. செயற்கைக்கோள்	-	அரசியல் வரைபடம்
5. நவ்ஸ்டார்	-	நிலவரைபடக் கலையியல்

விடை:

1. நிலவரைபடக் கலையியல் **2. அரசியல் வரைபடம்**

3. ஜியாய்டு **4. இன்மார்சாட்**

5. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

4. சிறுவினாக்கள்

1. புவியை குறித்துக்காட்டுவதற்கான முறைகள் யாவை?

நிலவரை படங்கள் (maps), வரைபட்கள் (charts), புவிமாதிரி (globe) ஆகியவை புவியைக் குறித்துக் காட்டப் பயன்படும் முறைகள் ஆகும்.

2. நிலவரைபடம் என்றால் என்ன?

ஒரு நிலவரைப்படம் என்பது காகிதம் அல்லது துணியில் ஏதேனும் தட்டையான பரப்பில் புவியின் மேற்பரப்பின் முப்பரிமான வடிவத்தைச் சிறிய வடிவில் காட்டுவதாகும். நிலவரை படம் ஒரு புவியியலாளரின் அடிப்படைக் கருவியாகும். இது வரைபடங்கள், வார்த்தைகள் மற்றும் குறியீடுகள் மூலம் புவியின் மேல் பரப்பினைத் தெள்ளத் தெளிவாகவும் திறம்படவும் விளக்குகிறது. புவியியல் கற்பித்தலின் ஒருங்கிணைந்த பகுதியாகவும் இருப்பிட வழிகாட்டியாகவும் வரைபடங்கள் சொல்லப்படுகின்றன. நிலவரைப் படங்கள் நிலப்பகுதியினை மேலிருந்து பார்ப்பது போல் வரையப்படுபவை.

3. நிலவரைபடத்தின் கூறுகள் யாவை?

ஒரு நிலவரைபடத்தில் தலைப்பு, அளவை, திசை, வலைப்பின்னல் அமைப்பு, கோட்டுச் சட்டம், நிலவரைப் படக்குறிப்பு மற்றும் முறை குறியீடுகள் ஆகிய கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

4. A மற்றும் B ஆகிய இரு நகரத்துக்கு இடையான தூரம் 5 கி.மீ ஆகும். இது நிலவரைபடத்தில் 5 செ.மீ இடையாக குறிக்கப்பட்டுள்ளது. இந்த தூரத்தை கணக்கிட்டு பிரதி பின்ன முறையில் விடை தருக.

பிரதி பின்ன முறை = $\frac{\text{நில வரைபட தூரம்}}{\text{புவிப்பரப்பின் தூரம்}} = \frac{5\ \text{செ.மீ}}{5\ \text{கி.மீட்டர்}}$

$= \frac{5\ \text{செ.மீ}}{500000\ \text{செ.மீ}} = \frac{1}{100000}$

5. நில அளவை செய்யப் பயன்படும் கருவிகளைக் கூறுக

புவியியலாளர்களால் பயன்படுத்தும் நவீன நில அளவைக் கருவிளான சங்கிலி, பட்டகத் காந்தவட்டை, சமதளமேசை, மட்டமானி, அப்னே மட்டம், சாய்வுமானி, தியோடலைட் மொத்த ஆய்வு நிலையம் மற்றும் உலகளாவிய பயண செயற்கைக் கோள், ஒழுங்கு முறை ஆகியவற்றைக் கொண்டு ஒரிடத்தின் தூரம், கோணம், உயரம் மற்றும் நிலப் பரப்பை அளவிடுவதற்குப் பயன்படுத்துகின்றனர்.

6. தொலைநுண்ணுர்வு – வரையறு

தொலை நுண்ணுணர்வு என்பது புவியில் உள்ள பொருட்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளாமல் தொலைவிலிருந்து உற்று நோக்கி அவற்றின் தகவல்கச் சேகரிப்பதாகும்.

7. தொலைநுண்ணர்வின் கூறுகள் யாவை?

1. ஆற்றல் மூலம் 2. அனுப்பும் வழி 3. இலக்கு 4. உணர்விகள்

5. காரணம் கூறுக

1. நிலவரைபடம் வரைதலில் செயற்கைக்கோள் பதிமங்கள் துணைபுரிகின்றன.

ஆயிரக்கணக்கான செயற்கைக்கோள் பதிமங்களை நம்மால் குறைந்த செலவில் பெறமுடியும். Google Earth. Google map ஆகிய சாதங்கள் இதற்கு உதவுகின்றன. இந்தப் பதிமங்களால் வரையப்பட்ட நிலவரைப் படங்கள் தெளிவானவை, துல்லியமானவை.

2. புவியியல் வல்லுநர்களின் அடிப்படைக் கருவி நிலைவரைபடம்

ஒரு நிலவரை படத்தில் தலைப்பு, அளவை, திசை, வலைப்பின்னல் அமைப்பு, கோட்டுச் சட்டம் நிலவரைப் படக் குறிப்பு மற்றும் முறைக் குறியீடுகள் ஆகிய கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும். இது நிலவரை படத்தின் நோக்கம் அல்லது கருத்தைக் குறிக்கிறது. (எ.கா: இந்தியா – இயற்கை அமைப்பு, உலகம் – அரசியல் தமிழ்நாடு – போக்குவரத்து)

3. நிலவரைபடத்தில் ஒரு குறிப்பிட்ட இடங்களைச் சுட்டிக்காட்ட புவி வலைப்பின்னல் அமைப்புப் பயன்படுத்துகிறது.

ஒரு தலப்படத்தில் ஒரு கட்டம் என்பது ஓரிடத்தின் அமைவிடத்தைக் காட்ட உதவும் எண்ணெழுத்துக் குறியீடுகள் கொண்ட வரிசைகளின் தொகுப்பாகும். தலப்படத்தின் இடமிருந்து வலமாகக் கிடைமட்டமாகக் காணப்படும் கோடுகள் வடக்கைக் கோடுகள் என்றும், மேலிருந்து கீழ் நோக்கிச் செங்குத்தாகக் காணப்படும் கோடுகள் கிழக்குக் கோடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. கட்டங்களின் செங்குத்து மற்றும் கிடைமட்டக் கோடுகள் வெட்டும் புள்ளிகள் எண்ணெழுத்துக் குறியீடுகளால் அடையாளம் குறிக்கப்படும் இணைப்பாயப் புள்ளிகள் ஆகும்.

4. நவீன வரைபட தொழில் நுட்பத்தில் வலை நிலவரைபடவியல் முக்கிய அங்கமாகும்.

வலைப் பின்னல் என்பது தலப்படத்தில் பல கோடுகள் இணைந்து ஒரு இடத்தின் அமைவிடத்தைத் துல்லியமாகக் காட்டும் நுட்பம் ஆகும். ஒரு நில வரைப்படம் என்னும் பதம் இன்றைய வலை மற்றும் மெய்நிகர் நிலவரை படங்கள் ஆகியவற்றின் அனைத்து அம்சங்களையும் விளக்குவது ஆகும்.

<u>வேறுபடுத்துக</u>

1. புவிமாதிரி மற்றும் நிலவரைபடம்

1. புவிமாதிரி என்பது ஒரு முப்பரிமான உருண்டை ஆகும். ஆனால் நிலவரைப்படம் என்பது இரு பரிமான வடிவம் கொண்டது.

2. புவிமாதிரி பூமி முழுவதையும் காட்டுகிறது. ஆனால் நிலவரைப்படம் பூமி முழுவதையும், அல்லது ஒரு பகுதியை மட்டும் காட்டக் கூடியது.

3. புவிமாதிரியானது விரிவான பட அமைப்புக் காட்டக் கூடியது. நிலவரைப்படம் இடங்களைப் பற்றிய குறிப்பான தகவல்களைத் தரக்கூடியது.

2. பெரிய அளவை நிலவரைபடம் மற்றும் சிறிய அளவை நிலவரைபடம்

பெரிய அளவை நிலவரைப் படம் : சிறிய பகுதியை அதிக விவரங்களுடன் காட்ட முடியும்.

சிறிய அளவை நிலவரைப் படம் : ஒரு பெரிய பகுதியைக் குறைவான விவரங்களுடன் காட்ட முடியும்.

3. வான்வழி புகைப்படங்கள் மற்றும் செயற்கைக்கோள் பதிமங்கள்

வான்வழி புகைப்படம்: வான்வழி புகைப்படம் எடுத்தல் என்பது குறைந்த உயரத்தில் பறக்கும் பறவைகள், பலூன்கள், ஹெலிகாப்டர்கள், விமானங்கள் மற்றும் ட்ரோன்களில் படக் கருவிகள் பொருத்தப்பட்டு எடுக்கப்பட்ட புகைப் படங்களின் மூலம் இடங்கள் அல்லது பொருள்கள் அல்லது நிகழ்வுகள் பற்றிய தகவலை அறியும் முறையைக் குறிக்கிறது. வான்வழி புகைப்படங்கள் ஒரு நிலையான உயரத்திலிருந்து 10-30 வினாடிகள் கால இடைவெளியில் தொடர்ந்து எடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு படத்திற்கும் முந்தைய படத்துடன் சிறிது மேற் பொருந்திய பகுதி இருக்கும். இணைந்த பகுதிகளை நீக்கி அனைத்து புகைப்படங்களின் இணை தோற்றம் செய்வதன் மூலம் ஆய்வு பகுதியாக முப்பரிமாண படத்தைத் தயாரிக்க முடியும்.

4. புவியியல் தகவல் அமைப்பு மற்றும் உலக அமைவிட கண்டறியும் தொகுதி

புவியியல் தகவல் அமைப்பு:

புவியியல் தகவல் அமைப்பு 1950 இல் வால்டா டாப்ளர் மற்றும் கனடாவைச் சார்ந்த ரோஜர் டாம்லின்டன் ஆகியோரால் அறிமுகப்படுத்தப்பட்டது. பொது மக்கள் செலவுக்காக புவி தகவல் தொகுதி கூகுள் நிலவரைப்படம், பாகூ நிலைவரைபடம் மற்றும் கூகுள் புவி மாதிரி போன்றவற்றை முதன்மை எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

மிக முக்கிய மூலப்பொருள் இட அமைப்பு ஆகும். வரைபடத்தில் நமக்கு அறிமுகமில்லாத ஓர் இடத்தை அறிந்து கொள்ள அறிமுகமான ஒருமுக வரியிலிருந்து இணைப்புப் பெற்று தகவல்களை ஒருங்கிணைக்கலாம். ஒரு பகுதியின் ஒவ்வொரு வகையின் தரவுகளும் ஒரு வகைபடத்தின் தனித்தனி அலகுகளாகச் சேகரித்து வகைப்பட்டுள்ளது. GIS இல் அடுக்குகள் தேவையெனில் பயன்படுத்தவும் தேவைஇல்லை எனில் அதை நீக்கவும் செய்யலாம். எடுத்துக்காட்டாக மருத்துவமனை, பள்ளிக்கூடம், நீர்நிலைகள், பூங்காக்கள் மற்றும் ஏ.டி.எம் தரவின் இணைப்பைப் பயன்படுத்தி கணினியால் ஒருவரை படத்தை உருவாக்க முடியும். நிலவரைப் படங்கள் பிரச்சனைக்குரிய இடங்களைச் சுட்டிக்காட்ட முடியும். வளமேலாண்மை, தகவல் தொடர்பு மற்றும் நகரவட்டார திட்டமிடலுக்குப் பயன்படுகிறது. பயன்பாட்டுத் தேவைகளை திட்டமிடவும் உள்ளாட்சி அமைப்புகளின் வரி விதித்தல் மற்றும் திட்டமிடுதலுக்கு உதவுகிறது.

உலக அமைவிட கண்டறியும் தொகுதி:

ஜி.பி.எஸ் (G.P.S) நமது வாகனங்களிலும் இது கை பேசிகளிலும் இல்லாவிட்டால் எதையோ தொலைத்தது போன்று உணரும் அளவிற்கு இன்றியமையாததாக உள்ளது. ஜி.பி.எஸ் என்பது உலகின் முதல் மற்றும் தற்போது அதிகம் உபயோகிப்படும் ஜி.என்.எஸ்.எஸ் ஆகும். இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புத் துறையினரால் உருவாக்கப்பட்டது. 1995 இல் முழு உபயோகத்திற்கு வந்தது. நவ்ஸ்டார் என்பது 20,350 கிலோ மீட்டர் நிலப்பரப்பிற்கு மேல் சுற்றி வரும் 6 வெவ்வேறு சுற்றுப்பாதையில் 24 அமெரிக்கா செயற்கைக் கோள்களின் வலைப் பின்னலாகும். ஒவ்வொரு செயற்கைகோளும், தொடர்ச்சியான உலகளாவிய தகவர் தொடர்புக்காக ஒரு நாளில் இருமுறை புவியைச் சுற்றி வருகின்றது. ஜி.பி.எஸ் கருவிகள் எல்லா அளவிலும், வடிவிலும் கிடைக்கின்றன. பெரும்பாலானவை கைபேசி அளவிலேயே கிடைக்கின்றன. கைகளில் வைத்து கொண்டோ , கப்பல்கள், விமானங்கள், சரக்கு வண்டிகள் மற்றும் கார்களில் பயன்படுத்தியோ உபயோகிக்கலாம்.

3. பேரிடர் மேலாண்மை – பேரிடரை எதிர்கொள்ளுதல்

பேரிடர் என்பது உயிருக்கும் உடைமைகளுக்கும் அழிவையும் சேதத்தையும் ஏற்படுத்தும் பேராபத்தாகும். காவலர்கள், தீயணைப்புத் துறையினர் மற்றும் அவசர மருத்துவ குழுக்கள் போன்றோர் மக்களின் முதன்மை பேரிடர் மீட்பு குழுக்கள் ஆவர். இக்குழுக்கள் உயிர்காப்பது, முதலுதவி வழங்குதல், போக்குவரத்து மற்றும் தகவல் போன்ற பாதிக்கப்பட்ட கட்டமைப்புகளைச் சீரமைத்தல் மற்றும் உணவு, நீர் மற்றும், நீர் மற்றும் இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகிய கடமைகளை ஆற்றுகின்றன. பேரிடர் மேலாண்மை என்பது தடுத்தல், தணித்தல், தயார்நிலை, எதிர் கொள்ளல் மற்றும் மீட்டல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். பேரிடர் மேலாண்மையில் அரசு, அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் குழுசார் நிறுவனங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பேரிடர் மேலாண்மையின் மரபு சார்ந்த அணுகுமுறை என்பது செயல்பாடுகளின் வரிசைகளில் பல படிநிலைகளைக் கொண்டுள்ளது. இது பேரிடர் மேலாண்மைச் சுழற்சியாக வெளிப்படுத்தப்படுகிறது. புவித்தட்டுகளின் நகர்வால் புவியின் ஒரு பகுதியில் திடீரென ஏற்படும் நில அதிர்வை நிலநடுக்கம் என்கிறோம். நிலநடுக்கம் தோன்றுமிடத்தை நிலநடுக்க மையம் என்கிறோம். நிலநடுக்கத்தால் ஏற்படும் பாதிப்பானது மையப் புள்ளிக்கு அருகில்தான் மிகவும் அதிகம். நிலநடுக்கத்தால் ஏற்படும் பாதிப்பானது மையப் புள்ளிக்கு அருகில்தான் மிகவும் அதிகம். நிலநடுக்கம் சீஸ்மோகிராப் என்ற கருவியால் பதிவு செய்யப்படுகிறது. இது ரிக்டர் அளவையில் அளக்கப்படுகிறது. ஜப்பான் முழுவதும் நிலநடுக்கப் பகுதியில் கொண்டுள்ளது. இந்தோனேஷியாவில் தான் உலகிலேயே அதிக நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. நிலநடுக்கத்தின்போது திறந்த வெளியில் இருக்க வேண்டும். கட்டிடம், மரங்கள், மின் விளக்குகள், மின்விளக்குகள், மின்கம்பிகள் ஆகியவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

அழிப்பேரலை உயிர் சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்துகிறது. நிலநடுக்கம் கடலுக்கு அடியில் ஏற்படும் நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு மற்றும் குறுங்கோள்கள் போன்றவற்றால் ஏற்படும் தொடர் பெருங்கடலின் அலைகளே ஆழிப் பேரலையாகும். ஆழிப்பேரலை தொடர்பான எச்சரிக்கைத் தகவல்களை அறிந்து கொள்ள உள்ளூர் வானொலி அல்லது தொலைகாட்சியில் காணலாம். ஆழிப்

பேரலையிலிருந்து யாரையாவது மீட்க வேண்டுமென்றால் சரியான உபகரணங்களுடன் கூடிய வல்லுநர்களை உதவிக்கு அழைக்க வேண்டும்.

உலகளவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலவரத்தில் உயிரிழக்கின்றனர். பல்வேறு இனம், மதம், அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகக் காரணிகளால் கலவரம் ஏற்படுகிறது. சகிப்புத் தன்மை இல்லாத நாடுகளில் கலவரங்கள் ஏற்படுகின்றன. வெப்பமான மற்றும் வறண்ட காலங்களில் அடர்ந்த மரங்கள் காணப்படும் பகுதிகளில் காட்டுத் தீ ஏற்படுகிறது. இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 42 சதவீதம் பெண்களும், 21 சதவீதம் ஆண்களும் தீவிபத்தினால் இறக்கின்றனர்.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்

1. கீழ்க்காண்பனவற்றில் ஒன்று பேரிடரைப் பொருத்தமட்டில் முதன்மை மீட்பு குழு இல்லை.

அ) காவலர்கள் ஆ) தீயணைப்புப் படையினர்

இ) காப்பீட்டு முகவர்கள் ஈ) அவசர மருத்துவக் குழு

2. 'விழு! மூடிக்கொள்! பிடித்துகொள்!' என்பது என்பதற்கான ஒத்திகை?

அ) தீ **ஆ) நிலநடுக்கம்**

இ) சுனாமி ஈ) கலவரம்

3. தீவிபத்து ஏற்படும்போது நீங்கள் அழைக்கும் எண்

அ) 114 **ஆ) 112** இ) 115 ஈ) 118

3. கீழ்க்காணும் சொற்றொடர்களில் எது தவறு?

அ) தீ விபத்திலிருந்து தப்பிக்க "நில்! விழு! உருள்!"

ஆ) விழு மூடிக்கொள் பிடித்துக்கொள் என்பது நிலநடுக்க தயார்நிலை

இ) "கடல் நீர் பின்வாங்கிச் சென்றால் நீங்கள் உயரமான பகுதிகளை நோக்கி ஓடுங்கள்" என்பது வெள்ளப்பெருக்குகான தயார் நிலை.

ஈ) துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டால் தரையில் கிடைமட்டமாகப் படுத்துக்கொண்டு தலையையும் கழுத்தையும் மூடிக்கொள்ளவும்.

5. கீழ்க்காணும் சொற்றொடர்களில் எது நிலநடுக்கத்தை எதிர்கொள்வதோடு தொடர்புடையது?

அ) "காவல் துறை மற்றும் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம்"

ஆ) “கடல் மட்டத்திலிருந்து உங்கள் தெரு எவ்வளவு உயரத்தில் உள்ளது மற்றும் கடலோரத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது எனத் தெரிந்து கொள்ளலாம்”

இ) “கண்ணாடிச் சன்னல், வெளிக்கதவுகள், சுவர் மற்றும் எளிதில் விழுக்கூடிய தொங்கும் மின்விளக்குகள் மற்றும் மரச்சாமன்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கவும்”

ஈ) கதவைத் திறப்பதற்கு முன்பு புறங்கையால் கதவைத் தொட்டு வெப்பமாக உணர்ந்தால் கதவைத் திறக்க வேண்டாம்.

2. சிறுவினாக்கள்

1. பேரிடர் முதன்மை மீட்புக் குழு என்பவர் யாவர்?

காவலர்கள், தீயணைப்புத் துறையினர் மற்றும் அவசர மருத்துவக் குழுக்கள் ஆவர்.

2. பேரிடர் மேலாண்மை சுழற்சியின் நான்கு நிலைகள் யாவை?

பேரிடர் மேலாண்மை என்பது தடுத்தல், தணித்தல், தயார் நிலை, எதிர்கொள்ளல் மற்றும் மீட்பர் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

3. ஜப்பானில் மிக அதிக அடர்த்தியில் நிலநடுக்க வலை காணப்பட்டாலும் இந்தோனேசியாவில் தான் மிக அதிக அளவில் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஏன்?

ஜப்பானை விட இந்தோனேஷியா அதிக பரப்பளவைக் கொண்டுள்ளதால் இந்தோனேசியாவில் தான் உலகிலேயே அதிக நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

4. இந்தியாவில் ஒவ்வொரு நாளும் எத்தனை ஆண்கள் பெண்கள் தீவிபத்தினால் இறக்கின்றனர்?

இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 21 சதவீத ஆண்களும் 42 சதவீத பெண்களும் தீ விபத்தினால் இறக்கின்றனர்.

5. சுனாமிக்குப் பிறகு என்ன செய்யவேண்டும்?

1. ஆழிப்பேரலையிலிருந்து யாரையாவது மீட்க வேண்டும் என்றால் சரியான உபகரணங்களுடன் கூடிய வல்லுனர்களை உதவிக்கு அழைக்க வேண்டும்.

2. சிறப்பு உதவி தேவைப்படும் குழந்தைகள், முதியோர், போக்குவரத்து வசதி இல்லாதவர்கள், ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு உதவி செய்யவும்.

3. எரிவாயு கசிகிறதா எனப் பரிசோதிக்கவும், எரிவாயுவின் மணம் வீசினால் வீட்டு சன்னல்களைத் திறந்துவிட்டு அனைவரையும் வெளியேற்ற வேண்டும்.

ஆழிப்பேரலை தொடர்பான அண்மைச் செய்திகளுக்கு வானொலி அல்லது தொலைக்காட்சியைக் காண வேண்டும்.

6. ஆழிப்பேரலைப் பற்றுச் சிறுகுறிப்பு வரைக

நில நடுக்கம், கடலுக்கு அடியில் ஏற்படும் நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு மற்றும் குறுங்கோள்கள் போன்றவற்றால் ஏற்படும் தொடர் பெருங்கடல்களின் அலைகளே ஆழிப் பேரலையாகும். ஆழிப் பேரலை 10 முதல் 30 மீட்டர் உயரத்தில் மணிக்கு சுமார் 700 – 800 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக் கூடியது. இது வெள்ளப் பெருக்கை உண்டாக்கும். இது மின்சாரம், தகவல் தொடர்பு, நீர் அளிப்பு போன்றவற்றைப் பாதிக்கின்றது.

7. நிலநடுக்கத்தின்போது கட்டத்திற்குள் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

1. மேசையின் அடியில் தலையில் மண்டியிட்டு அமர்ந்து மேசையின் காலை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, ஒரு கையால் தலையை மூடிக்கொள்ளவும். மரச் சாமான்கள் இல்லையெனில் அறையில் மூலையில் குத்துக்காலிட்டு அமர்ந்து இருகைகளாலும் தலையை மூடிக் கொள்ளவும்.

2. அறையின் மூலையில் மேசையின் அடியில் அல்லது கட்டிலுக்கு அடியில் அமர்ந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

3. கண்ணாடிச் சன்னல், வெளிக் கதவுகள், சுவர் மற்றும் எளிதில் விழக்கூடிய தொங்கும் மின்விளக்குகள் மற்றும் மரச்சாமன்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கவும்.

4. நில நடுக்கம் முடியும் வரை உள்ளே பாதுகாப்பாக இருக்கவும்

8. ஆழிப் பேரலையை எவ்வாறு எதிர்கொள்வாய்?

1. முதலில் நீங்கள் இருக்கும் வீடு, பள்ளி, பணிபுரியும் இடம், அடிக்கடி சென்று வரும் இடம் போன்றவை கடலோர ஆழிப் பேரலை பாதிக்கப்பட்ட இடங்களா எனக் கண்டறியவும்.

2. ஆழிப் பேரலை பாதிப்புக்குள்ளாகும் உங்கள் வீடு, பள்ளி, பணிபுரியுமிடம், அடிக்கடி சென்று வருமிடம் போன்றவற்றிலிருந்து வெளியேறும் வழியைத் திட்டமிடவும்.

3. ஆழிப்பேரலை தொடர்பான எச்சரிகைத் தகவல்களை அறிந்து கொள்ள உள்ளூர் வானொலி அல்லது தொலைகாட்சியைக் காண வேண்டும்.

4. ஆழிப் பேரலைப் பற்றி குடும்பத்துடன் கலந்துரையாடவும் ஆழிப்பேரலையின் போது என்ன செய்ய வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆழிப் பேரலைப் பற்றி முன் கூட்டியே கலந்துரையாடுவது அவசிய நிலையில் ஆழிப் பேரலை பற்றிய பயத்தைக் குறைக்கவும் மதிப்புமிக்க நேரத்தைச் சேமிக்கவும் உதவும்.

9. தீ விபத்தின் போது என்ன செய்ய வேண்டும் என மூன்று வாக்கியங்களில் எழுதுக

1. முதலில் நாம் இருக்கும் கட்டடத்தின் வெளியேறும் வழி குறித்தத் திட்டத்தினைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

2. தீ அபாயச்சங்கு எச்சரிக்கை ஒலி கேட்டவுடன் அமைதியாகவும் வேகமாகவும் வெளியேற வேண்டும்.

3. கதலைத் திறப்பதற்கு முன்பு புறங்கையால் கதவைத் தொட்டு வெப்பமாக உணர்ந்தால் கதவைத் திறக்க வேண்டாம். தீ விபத்திலிருந்து தப்பிக்க நில்! விழு! சுருள்! என சத்தமாக அறிவுறுத்தவும். உங்கள் ஆடையில் தீ பிடித்தால் ஓடாமல் தரையில் படுத்து உருண்டு தீ பரவுவதைத் தடுக்கலாம்.

குடிமையியல்

1. அரசாங்கங்களின் வகைகள்

இந்திய அரசியலமைப்பு மற்றும் சட்டங்களுக்கு உட்பட்ட சட்டமன், நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரங்களை அரசு செயல்படுத்துகிறத. அரசின் செயல்பாடுகளை ஒற்றை ஆட்சி முறை, கூட்டாட்சி முறை, நாடாளுமன்ற ஆட்சி முறை மற்றும் ஜனாதிபதி ஆட்சி முறை என வகைப்படுத்தப்படுகின்றன. ஒற்றை ஆட்சி என்பது இறையாண்மை மிக்க ஓர் அரசு ஒரெ நிறுவனமாக இருந்து ஆட்சி செய்வதாகும். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் இலங்கை ஆகியவை ஒற்றை ஆட்சிமுறைக்கான உதாரணங்களாகும். ஒற்றையாட்சி முறையில் அனைத்து அதிகாரங்களும் ஒரே இடத்தில் மையப்படுத்தப்படுகின்றன. ஒற்றை ஆட்சி முறை சிறு நாடுகளுக்கு பொருத்தமானது. மிகப் பெரிய நாடுகளுக்குப் பொருத்தமற்றது.

அரசியலமைப்பு சட்டத்தின்படி தேசிய அரசும் பிராந்திய அரசுகளும் தங்களது அதிகாரங்களைப் பகிர்ந்து அவரவர் எல்லைக்கு உட்பட்டு சுதந்திரமாகச் செயல்படுவது கூட்டாட்சி முறை ஆட்சியாகும். அமெரிக்க ஜக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா, ரஷ்யா, பிரேசில், அர்ஜென்டினா ஆகிய நாடுகள் கூட்டாட்சி முறையைக் கொண்டதாகும். உள்ளூர் சுயஆட்சி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையே சமரசம் ஏற்படுத்துதல் கூட்டாட்சியின் நிறையாகும். ஆனால் கூட்டாட்சி முறை பலவீனமானது. இந்திய அரசியலமைப்பில் இரட்டை அரசாங்கம், எழுதப்பட்ட அரசியலமைப்பு, அதிகாரப் பகிர்வு, அரசியல் அரசியலமைப்பின் உயர் அதிகாரம் ஆகியவை முக்கிய அம்சங்களாகும்.

நவீன மக்களாட்சி முறைகளை நாடாளுமன்றம் ஆட்சி முறை, அதிபர் மக்களாட்சி முறை என இருவகைகளாகப் பிரிக்கலாம். இவ்வகை ஆட்சிமுறை பிரிட்டன், ஜப்பான், கனடா, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படுகின்றன. நாடாளுமன்ற ஆட்சி முறையில் பெரும்பான்மையான பெற்ற கட்சி ஆட்சி அமைக்கிறது.

அதிபர் மக்களாட்சி முறை என்பது சட்டமன்றத்திற்கு பொறுப்பில்லாததாகவும், நாடாளுமன்றம் அற்றதாகவும் நிலைத்த நிர்வாகம் அற்றதாகவும் நிலைத்த நிர்வாக அமைப்பும் உடையதாகவும் இருக்கும். இவ்வரசு முறை அமெரிக்கா, பிரேசில், இரஷ்யா, இலங்கை போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது. அமெரிக்க அதிபர் மாகாணம் மற்றும் அரசின் தலைவராகத் திகழ்கிறார்.அமெரிக்க அதிபர் வாக்காளர்

மன்றத்தினால் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதிபர் அமைச்சரவையின் உதவியோடு ஆட்சி புரிகிறார். அமைச்சரவையைக் "கிச்சன் கேபினேட்" என்றும் அழைக்கிறார்கள். அதிபர் மக்களாட்சி முறை ஜனநாயகமானது. நல்ல அரசு என்பது பொது விவகாரங்களையும், பொது வளங்களையும் குறிப்பதாகும். அரசு மற்றும் ஆட்சி என்பது ஒரு நிறுவனம் அமைப்பு அல்லது ஒரு மாநிலத்தின் மீது அதிகாலத்தைப் பயன்படுத்தும் இணைச் சொற்கள் ஆகும். நல்ஆட்சியில் சட்டத்தின் ஆட்சி நடைபெறும். மொத்த தேசிய நெகிழ்ச்சி என்பது தற்போது வளர்ந்து வரும் ஒரு தத்துவமாகும்.

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. **ஜப்பான், பிரான்ஸ்** ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்.

2. பாராளுமன்ற ஆட்சி முறை **பொறுப்பு அரசாங்கம் (அல்லது) வெஸ்ட் மினிஸ்டர்** என்றும் அழைக்கப்படுகின்றது.

3. பாராளுமன்ற ஆட்சிமுறையில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் **பிரதம மந்திரி** ஆவார்.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

எண்	நாடுகள்	நாடாளுமன்றத்தின் பெயர்
1.	அமெரிக்க ஐக்கிய நாடுகள்	**காங்கிரஸ்**
2.	நார்வே	**ஸ்டார்டிங்**
3.	**டென்மார்க்**	போக்டிங்

3. சிறுவினாக்கள்:

1. நேபாள மக்களாட்சி:

நேபாளத்தில் துடிப்பான ஜனநாயகம் சார்ந்த மக்கள் சமூக இயக்கத்தின் தலைவர்கள் 'ஏழு கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். தலைநகரம் காத்மாண்டுவின் சுற்றுச்சாலையின் நெடுங்கிலும் ஏழு இடங்களில் 10 லட்சம் மக்கள் பங்கு ஏற்குமாறு அழைப்பு விடுத்தனர். இந்த இமாலய அரசின் எதேச்சதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களாட்சிக்கு புத்துயிர் அளிக்கப் பல்லாயிரக்கணக்கான குடிமக்கள் கோரினர்'. இதுபோன்ற நிகழ்வால் அரசர் ஞானேந்திராவின் முடியாட்சி, முடிபெற்று மக்காளாட்சிக்கு வழிவகுத்தது.

2. ஒற்றையாட்சி முறை:

ஒற்றை ஆட்சி முறை என்பது இறையாண்மை மிக்க ஓர் அரசு ஒரே நிறுவனமாக இருந்து ஆட்சி செய்வதாகும்.

3. அரசமைப்பின் வகைகளைப் பட்டியலிடுக.

அரசமைப்பின் வகைகள்:

1. எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத அரசமைப்பு.
2. கூட்டாட்சி முறை மற்றும் ஒற்றையாட்சி முறை.
3. நெகிழும் தன்மையுடைய அரசமைப்பு மற்றும் நெகிழும் தன்மையற்ற அரசமைப்பு.

4. கூட்டாட்சி முறையின் நிறைகள் யாவை?

1. உள்ளூர் சுய ஆட்சி மற்றும் தேசிய ஒருமைபாட்டுக்கு இடையே சமரசம் ஏற்படுத்துதல்.
2. மத்திய, மாநில அரசுகளுக்கு இடையிலான அதிகாலப் பகிர்வு, நிர்வாகத் திறன்கள் மேம்பட வழிவகுக்கிறது.
3. மிகப் பெரிய நாடுகள் தோன்றுவதற்கு வழி செய்கிறது.
4. மிகப் பெரிய நாடுகளுக்கு பொருத்தமானது.
5. பொருளாதார மற்றும் பண்பாட்டு முன்னேற்றங்களுக்கு நன்மை அளிக்கிறது.

5. ஒற்றையாட்சி முறைக்கும் கூட்டாட்சி முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.

	ஒற்றையாட்சி முறை	**கூட்டாட்சி முறை**
1.	ஒரேயொரு அரசு அல்லது துணைக் குழுக்கள்	இரண்டு நிலையில் அரசாங்கம்
2.	பெரும்பாலும் ஒரே குடியுரிமை	இரட்டை குடியுரிமை
3.	துணைக் குழுக்கள் தன்னிசையாகச் செயல்பட இயலாது.	கூட்டாட்சியின் குழுக்கள் மத்திய அரசுக்கு உட்பட்டவை.
4.	அதிகாரப் பகிர்வு இல்லை	அதிகாரப் பகிர்வு
5.	மையப்படுத்தப்பட்ட அதிகாரம்	அதிகாரப் பரவல்

6. ஒற்றையாட்சி முறையின் நிறைகளை விவரி.

1. சிறு நாடுகளுக்குப் பொருத்தமானது.
2. அதிகாரம் மற்றும் பொறுப்புகளுக்கு இடையில் மோதல்கள் இருப்பதில்லை.
3. ஒற்றை ஆட்சிமுறை உடனடியாக முடிவெடுத்துத் துரிதமாகச் செயல்படுகிறது.

4. ஒற்றை ஆட்சி குறைந்த செலவுடையது.

5. அரசியலமைப்பு திருத்தங்களை எளிதில் மேற்கொள்ள இயலும்.

6. ஒற்றுமை சீரான சட்டம், கொள்கை மற்றும் நிர்வாகத்தினை உள்ளடக்கியது.

7. அதிபர் மக்களாட்சி முறை பற்றிக் குறிப்பு வரைக. மேலும் அதிபர் மக்களாட்சி முறைக்கும் நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.

அதிபர் மக்களாட்சி முறை என்பது சட்டமன்றத்திற்கு பொறுப்பில்லாததாகவும் நாடாளுமன்றம் அற்றதாகவும், நிலைத்த நிர்வாகம் அற்றதாகவும், நிலைத்த நிர்வாக அமைப்பு உடையதாகவும் இருக்கும். அதிகாரப் பகிர்வு கொள்கையின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட இவ்வரசு முறை அமெரிக்கா, பிரேசில், ரஷ்யா, இலங்கை போன்ற நாடுகளில் உள்ளது.

	அதிபர் மக்களாட்சி முறை	**நாடாளுமன்ற ஆட்சி முறை**
1.	குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.	பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாவார்,
2.	அதிபரே அதிகாரம் படைத்தவர்.	மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது.
3.	அதிகாரப் பிரிவினை	அதிகாரப் பிரிவினை மையப்படுத்தப்படாமல் இருப்பது.
4.	சுதந்திரமாகச் செயல்படும் பிரிவுகள்	தனித்தனியான சார்புடைய செயல்பாடுகளைக் கொண்ட பிரிவுகள்
5.	மாகாணத்தின் தலைவர் அதிபர் ஆவார்.	அரசின் தலைவர்-குடியரசுத் தலைவர்
6.	தனி நபர் தலைமை	கூட்டுத் தலைமை
7.	மகாசபையின் செயல்களுக்கு அதிபர் பொறுப்பை எற்கமாட்டார்.	கூட்டு மற்றும் தனித்தனியான பொறுப்புகள்.
8	பதவிக் காலம் நான்கு ஆண்டகள்.	ஐந்து ஆண்டுகள்

8. ஒற்றையாட்சி முறை மற்றும் கூட்டாட்சி முறை.

ஒற்றையாட்சி முறை	**கூட்டாட்சி முறை**
ஒரேயொரு அரசு அல்லது துணைக் குழுக்கள்	இரண்டு நிலையில் அரசாங்கம்
பெரும்பாலும் ஒரே குடியுரிமை	இரட்டைக் குடியுரிமை

துணைக் குழுக்கள் தன்னிச்சையாகச் செயல்பட இயலாது	கூட்டாட்சியின் குழுக்கள் மத்திய அரசுக்கு உட்பட்டவை
அதிகாரப் பகிர்வு இல்லை	அதிகாரப் பகிர்வு
மையப்படுத்தப்பட்ட அதிகாரம்	அதிகாரப் பரவல்

9. நாடாளுமன்ற ஆட்சி முறை மற்றும் அதிபர் மக்களாட்சி.

அதிபர் மக்களாட்சி முறை	நாடாளுமன்ற ஆட்சி முறை
குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.	பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாவார்.
அதிபரே அதிகாரம் படைத்தவர்	மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது
அதிகாரப் பிரிவினை	அதிகாரப் பிரிவினை மையப்படத்தப் படாமல் இருப்பத
சுதந்திரமாகச் செயல்படும் பிரிவுகள்	தனித்தனியாக சார்புடைய செயல்பாடுகளைக் கொண்ட பிரிவுகள்
மாகாணத்தின் தலைவர் அதிபர் ஆவார்.	அரசின் தலைவர் – குடியரசுத் தலைவர்
அரசாங்கத்தின் தலைவரும் அதிபரே.	அரசாங்கத்தின் தலைவர் - பிரதம அமைச்சர்
தனிநபர் தலைமை	கூட்டுத் தலைமை
மகா சபையின் செயல்களுக்கு அதிபர் பொறுப்பை ஏற்க மாட்டார்.	கூட்டு மற்றும் தனித்தனியான பொறுப்புகள்.

2. உள்ளாட்சி அமைப்புகள்

ஒரு கிராமம், சிறிய நகரம் அல்லது மாநகரம் போன்றிய சிறிய சமூகத்தினை நிர்வாகம் செய்யும் அமைப்புகளே உள்ளாட்சி அமைப்புகள் எனப்படுகின்றன. இந்தியாவில் உள்ளாட்சி அமைப்பு பிற்கால சோழர் காலத்தில் உச்ச நிலையை அடைந்து. நவீன உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடித்தளமிட்டவர் ரிப்பன்பிரபு ஆவார். அவர் உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை என்றழைக்கப்படுகிறார். விடுதலைப் போராட்டத்தின் போது பஞ்சாயத்து சீரமைப்பு என்பது மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது.

விடுதலைக்குப் பின் உள்ளாட்சி அமைப்புகள் கருத்துருவாக்கம் செய்யப்பட்டன. 73 மற்றும் 74 வது அரசமைப்பு சட்ட திருத்தச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகள் ஊராட்சி என்று அழைக்கப்படுகிறது.500க்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டுள்ள ஒவ்வொரு கிராமமும் கிராம ஊராட்சியாக மாறியுள்ளது. கிராம ஊராட்சிகள் பல பணிகளை

செய்துவருகின்றன. கிராம ஊராட்சி மட்டும் வரி விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. கிராம சபைக் கூட்டங்கள் ஒரு வருடத்தில் நான்கு முறை நடைபெறுகிறது.

பல ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்படுகின்றது. ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். உறுப்பினர்கள் தங்களின் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

மாவட்ட ஆட்சியர், திட்ட அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் ஊராட்சி ஒன்றியத்தின் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரம் பெற்றுள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி தலைவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி பேரூராட்சி எனப்படும் பேரூராட்சித் தலைவரும் உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பேரூராட்சியின் நிர்வாகத்தினை மேற்கொள்ள ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்படுகிறார். ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி நகராட்சி எனப்படும்.நகரசபைத் தலைவர், கவுன்சிலர்களை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். நகராட்சியை நிர்வாகம் செய்ய நகராட்சி ஆணையர் நியமிக்கப்படுகிறார். பல இலட்சம் மக்கள் தொகை கொண்ட பெரு நகரப் பகுதிகள் மாநகராட்சி என அழைக்கப்படுகிறது. மாநகராட்சியின் தலைவர் மேயர் என அழைக்கப்படுகிறார். தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள் உள்ளன. இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஒருவர் மாநகராட்சியின் ஆணையராக நியமிக்கப்படுகிறார். உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களை மாநில தேர்தல் ஆணையம் நடத்துகின்றது. நமது மக்களாட்சிக்கு உள்ளாட்சி அமைப்புகள் அடிப்படைகளாகும்.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. 1985 ஆம் ஆண்டு திட்டக்குழுவினால் நிறுவப்பட்ட குழு எது?

அ) பல்வந்ராய் மேத்தா குழு ஆ) அசோக் மேத்தா குழு

இ) GVK ராவ் மேத்தா குழு ஈ) LM சிங்வி மேத்தா குழு

2. .... காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்புப் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.

அ) சோழர் ஆ) சேரர்

இ) பாண்டியர் ஈ) பல்லவர்

3. 73 மற்றும் 74வது அரசமைப்புத் திருத்தச் சட்டங்கள் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்தன.

அ) 1992 ஆ) 1995

இ) 1997 ஈ) 1990

4. ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகின்றவர் .... ஆவார்.

அ) ஆணையர் **ஆ) மாவட்ட ஆட்சியர்**

இ) பகுதி உறுப்பினர் ஈ) மாநகரத் தலைவர்

2. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. 'உள்ளாட்சி அமைப்புகளின்' தந்தை என அழைக்கப்படுபவர் **ரிப்பன் பிரிவு**

2. நமது விடுதலைப் போராட்டத்தின் போது மறுசீரமைப்பு என்பது **மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது** ஆக விளங்கியது.

3. சோழர் காலத்தின் போது கிராம சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இரகசிய தேர்தல் முறைக்கு **குடவோலைமுறை** என்றழைக்கப்பட்டது.

4. கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு **கிராம ஊராட்சி** ஆகும்

5. பேரூராட்சிகளின் நிர்வாகத்தினைக் கண்காணிப்பவர் **செயல் அலுவலர்** ஆவார்.

3. பொருத்துக

				விடை
1. மாவட்ட ஊராட்சி	-	கிராமங்கள்	-	மாவட்ட அளவிலானது
2. கிராம சபைகள்	-	மாநகரத் தலைவர்	-	கிராமங்கள்
3. பகுதி குழுக்கள்	-	பெருந்தலைவர்	-	நகராட்சிகள்
4. ஊராட்சி ஒன்றியம்	-	மாவட்ட அளவிலானது	-	பெருந்தலைவர்
5. மாநகராட்சி	-	நகராட்சிகள்	-	மாநகரத் தலைவர்

4. தவறுகளைக் கண்டறிந்து பிழை திருத்தி எழுதவும்

1. ஊராட்சி ஒன்றியம் பல மாவட்டங்கள் ஒன்றிணைவதால் உருவாகின்றது.

விடை: தவறு – பல ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.

2. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது.

விடை: தவறு – ஒவ்வொரு கிராமத்திலும் கிராம ஊராட்சி அமைந்துள்ளது.

3. நகராட்சி ஆணையர் ஓர் இந்திய அரசுப் பணிகள் அலுவலர் ஆவார்.

விடை: சரி – நகராட்சியினை நிர்வாகம் செய்ய ஒரு நகராட்சி ஆணையர் அரசால் நியமிக்கப்படுகிறார்.

4. ஊராட்சிகளில், ஊராட்சித்தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கபடுகின்றனர்.

விடை: சரி – நகராட்சிகளில் ஊராட்சித் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மககளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

4. சிறுவினாக்கள்

1. கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை?

1. சொத்து வரி 2. தொழில் வரி

3. வீட்டு வரி 4. குடிநீர் இணைப்புக்கான கட்டணம்

5. நில வரி 6. கடைகள் மீது விதிக்கப்படும் வரிகள்

2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?

அ) மூன்று அடுக்கு அமைப்பு

ஆ) கிராம சபை

இ) தேர்தல் ஆணையத்தினை நிறுவுதல்

ஈ) நிதி ஆணையத்தினை நிறுவுதல்

உ) மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு

ஊ) பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு

எ) மாவட்ட திட்டக் குழுக்களை அமைத்தல்

3. கிராம ஊராட்சிகளின் முக்கிய பணிகள் யாவை?

1. குடிநீர் வழங்குதல்

2. தெரு விளக்குகளைப் பராமரித்தல்

3. கிராம நூலகங்களைப் பராமரித்தல்

4. சிறிய பாலங்களைப் பராமரித்தல்

6. வீட்டுமனைகளுக்கு அனுமதி அளித்தல்

7. வடிகால் அமைப்புக்களைப் பராமரித்தல்

8.தொகுப்பு வீடுகளைக் கட்டுதல்

9. தெரு சுத்தம் செய்தல்

10. இடுகாடுகளைப் பராமரித்தல்

11. பொதுக் கழிப்பிட வசதிகளைப் பராமரித்தல்

4. உள்ளாட்சி அமைப்புகளின் விருப்பப் பணிகள் யாவை?

1. கிராமங்களிலுள்ள தெரு விளக்குகளைப் பராமரித்தல்

2. சந்தைகளையும், திருவிழாக்களையும் நடத்துதல்

3. மரங்களை நடுதல்

4. விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல்

5. வண்டிகள் நிறுத்தப்படும் இடங்களில் உள்ள வாகனங்கள் இறைச்சி கூடங்கள் மற்றும் கால்நடைகளின் கொட்டகை ஆகியவற்றைப் பராமரித்தல்.

6. பொருட்காட்சிகள் நடைபெறும் இடங்களைக் கட்டுப்படுத்துதல்.

5. மாவட்ட ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் யார்?

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்படுகிறது. 50000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. அப்பகுதி மக்களால் பகுதி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவ்வுறுப்பினர்கள் தங்களில் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

6. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் யாவை?

1. பேரூராட்சி 2. நகராட்சி 3. மாநகராட்சி

3. சாலை பாதுகாப்பு

சாலை விபத்து என்பது திறந்தவெளி சாலையில் ஒரு வாகன விபத்தில் குறைந்தபட்சம் ஒரு நபர் காயமடைவதையோ அல்லது இறப்பதையோ குறிக்கும். காயத்தால் ஏற்படும் காரணங்களுக்கு சாலை விபத்துகள் முதன்மைக் காரணங்களாகும். ஆண்டுக்கு 1,30,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புடன் இந்தியா உலகின் மிக மோசமான சாலை விபத்துக்களைக் கொண்ட நாடாக உள்ளது. ஓட்டுநரின் அதிக வேகம், சாலை விதிகளை மீறல், போக்குவரத்துக் குறியீடுகளைப் புரிந்து கொள்ளத் தவறுதல், மது அருந்துதல்

ஆகியவைகள் சாலை விபத்துக்கு காரணிகளாகும். பாதசாரிகளும், பயணிகளும் சாலை விபத்துக்கு காரணமாவார்கள்.

இருக்கைப்பட்டை பயன்படுத்துவதன் மூலம் சாலை விபத்தினால் ஏற்படும் இழப்பை 51% தடுக்கலாம். குழந்தைகளுக்கான சாலை பாதுகாப்பை உறுதி செய்யும் விதிகளை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுகக வேண்டும். குழந்தைகளுக்கு சாலை பாதுகாப்பு விதிகளை கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு சாலை பாதுகாப்பு விதிகளை கற்றுக் கொடுக்க வேண்டும். சாலை பாதுகாப்பு செயல்பாடுகள் குழந்தைகள் சாலை பாதுகாப்புப் பற்றி கற்க உதவும். வளர்ந்த குழந்தைகள் கற்க குறுக்கெழுத்து ஒரு சிறந்த முறையாகும். சிவப்பு விளக்கு, பச்சை விளக்கு பற்றி குழந்தைகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

1. (i). எந்த வகை சாலைப் பயன்பாடு மிக அதிக நபர்கள் இறப்பதற்குக் காரணமாகிறது?

இருசக்கர வாகனங்களை ஓட்டுவது மிக அதிக நபர்கள் இறப்பதற்குக் காரணமாகிறது.

(ii) உங்களால் ஏதாவது மூன்று காரணங்களைக் குறிப்பிட முடியுமா?

1) அதிக வேகம்

2) குடிபோதையில் வாகனத்தை ஓட்டுதல்

3) தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனங்களை ஓட்டுதல்

(iii) இதைச்சார்ந்த சாலை விதிகள் என்ன என்பதைக் குறிப்பிட முடியுமா?

1) 112/183 MVA படி அபராதம் ரூ.1000/-

2) செக்ஷன் 185/ MVA படி ஆறு மாதம் சிறைத்தண்டனை அல்லது ரூ. 10,000/- அபராதம்.

3) அபராதம் ரூ. 1000/- ஓட்டுநர் உரிமம் மூன்று மாத காலத்திற்கு ரத்து செய்யப்படும்.

2. பாதசாரிகள் எவ்வாறு தங்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்?

பாதசாரிகள் இடப்புறம் உள்ள நடைமேடை மேல் நடந்து செல்ல வேண்டும். நடைமேடை இல்லாத சாலைகளில் வலப்புறம் ஓரமாக, எதிரே வரும் வாகனங்கள் தெதியும் படி நடந்து செல்ல வேண்டும்.

கவனக்குறைவாக சாலைகளில் நடப்பதையும், சாலையில் விளையாடுவதையும் தவிர்க்க வேண்டும்

பாதசாரிகள் சாலையைக் கடக்கும் இடத்தில் சாலையைக் கடந்து செல்ல வேண்டும்.

3. விபத்தைத் தடுக்கும் வழிகள் யாவை?

1) சாலை விபத்தைப் பற்றிய கல்வியறிவு மற்றும் விழிப்புணர்வு

2. சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துதல்

3. தொழில் நுட்பம், வாகன வடிவமைப்பு மற்றும் சாலை கட்டமைப்பு

4. இருக்கைப் பட்டை பயன்படுத்துதல்

4. சாலை பாதுகாப்புக் குறிகளை எழுதுக

1. சாலை பாதுகாப்புக் குறிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்

2. நில்! கவனி! செல்!

3. கவனி! – கேள்!

4. சாலையில் ஓடாதீர்

5. எப்போதும் சாலையோரத்தைப் பயன்படுத்துவீர்

6. வாகனத்தின் வெளியே கையை நீட்டாதீர்

7. வளைவில் சாலையைக் கடக்காதீர்

8. அவசரப்படாதீர்

பொருளியல்

1. தமிழ்நாடு வேளாண்மை

தமிழக மக்களில் பெரும்பான்மையினர் வேளாண் தொழிலை நம்பி இருந்தனர். கடந்த பத்தாண்டுகளில் விவசாய தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. வேளாண் தொழில் ஈடுபடுவோரின் பெரும் பகுதியினர் நிலமற்ற கூலித் தொழிலாளிகள் ஆவர். நிலம் படைத்தோர் எல்லோரிடமும் ஒரே அளவில் நிலம் இருப்பதில்லை. தமிழகத்தில் பெரும்பாலான விவசாயிகள் குறு விவசாயிகள் ஆவர். குறு விவசாயிகள் 78 விழுக்காடு உள்ளனர். தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதிலுமே சாகுபடி செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு சுருங்கிக் கொண்டே வருகிறது.

தமிழகத்தின் புவியியல் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பு மட்டுமே பயிர் செய்யப்படுகிறது. தமிழகத்தில் நிகரமாக பயிர் செய்யப்படும் பரப்பளவு 45,44000 ஹெக்டேர்கள் ஆகும். ஏறத்தாழ 72 விழுக்காடு பரப்பளவில் உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்டன. தமிழகம் தனது தேவைக்கான நீரை வடகிழக்கு மற்றும் தென் மேற்று பருவ மழைகளிலிருந்து பெறுகிறது. வடகிழக்குப் பருவ மழை நீரைத் தேக்கங்களிலும், கண்மாய்கள், ஏரிகளிலும் தேக்கி வேளாண்மையை மேற்கொள்கின்றனர். தமிழக வேளாண்மைக்கான நீரை வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவை வழங்குகின்றன. ஆழ்துளைக் கிணறுகள் பயன்படுத்தப்படுகின்றன. தமிழக வேளாண்மை பெருமளவிற்கு நிலத்தடி

நீரையே நம்பி இருக்கிறது. தமிழகத்தில் உணவு தானியம் பயிரிடப்படும் பரப்பில் 57 விழுக்காடு பாசன வசதி பெறுகின்ற நெல் சாகுபடிதான் 30 விழுக்காடு மேற்கொள்ளப்படுகிறது. சிறுதானிய /சாகுபடி குறைந்த அளவிலேயே நடைபெறுகிறது.

நன்னீர் பாசனத் தொழில்நுட்பம் பாசன நீர் பற்றாக்குறைக்கு நல்ல தீர்வாக விளங்குகிறது. தமிழகத்தில் நன்னீர் பற்றாக்குறை உள்ளது. தமிழகத்தில் நெல்லின் உற்பத்தித்திறன் 2014 – 15 ஆண்டில் ஹெக்டேருக்கு 4,429 கிலோ என்ற அளவில் உள்ளது. நெல்லுக்கு அடுத்தபடியாக மக்கா சோளம் விளைவிக்கப்படுகிறது. இது தவிர கேழ்வரகு, பருப்பு வகைகள் பயிரிடப்படுகின்றன. பயிர்களின் உற்பத்தித் திறன் தொடர்ந்து அதிகரிக்கிறது. தமிழகத்தில் உற்பத்தித்திறன் மற்றும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டுமே தொடர்ந்து அதிகரித்துள்ளது.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. பயிர் செய்யப்படும் பரப்பளவில் பாசன வசதி பெற்ற நிலத்தின் பரப்பளவு

அ) 27% **ஆ) 57%** இ) 28 ஈ) 49%

2. இவற்றுள் உணவில்லாத பயிர் எது?

அ) கம்பு ஆ) கேழ்வரகு இ) சோளம் **ஈ) தென்னை**

3. 2014 – 2015 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தித் திறன்

அ) 3039 கி.கி **ஆ) 4429 கி.கி** இ) 2775 கி.கி ஈ) 3519 கி.கி

3. தமிழகத்தின் வேளாண் உற்பத்தித்திறன் மற்றும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டுமே

அ) குறைந்துள்ளது ஆ) எதிர்மறையான உள்ளது

இ) நிலையாக உள்ளது **ஈ) அதிகரித்துள்ளது**

5. தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை பொழியும் மாதங்கள்

அ) ஆகஸ்டு – அக்டோபர் ஆ) செப்டம்பர் – நவம்பர்

இ) அக்டோபர் – டிசம்பர் ஈ) நவம்பர் – ஜனவரி

2. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தமிழக மக்களில் பெரும்பான்மையினர் **வேளாண்** தொழிலையே சார்ந்திருக்கின்றனர்.

2. தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது **வடகிழக்கு** பருவ மழையாகும்

3. தமிழகத்தின் மொத்தப் புவியியல் பரப்பு **ஒரு கோடியே முப்பது இலட்சத்து முப்பத்து மூன்றாயிரம்** ஹெக்டேர்கள் ஆகும்.

3. பொருத்துக

1. உணவில்லாத பயிர்கள் - 79,38,000

2. பருப்பு வகைகள் - ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர்

3. வடகிழக்குப் பருவமழை - அக்டோபர் – டிசம்பர்

4. குறு விவசாயிகள் - உளுந்து, துவரை, பாசிப்பயிறு

5. 2015 இல் விவசாயிகளின் எண்ணிக்கை - தென்னை

விடை:

1. தென்னை 2) உளுந்து, துவரை, பாசிப்பயிறு

3) அக்டோபர்-டிசம்பர் 4) ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர்

5) 79,38,000

4. சிறுவினாக்கள்

1. உணவுப்பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும், உணவல்லாத பயர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும் எழுதுக

உணவுப் பயிர்கள்: நெல், சோளம் உணவில்லாத பயிர்கள்: தென்னை, கரும்பு

2. பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு மாறுவதற்கான காரணிகள் யாவை?

மழைப் பொழிவு, நீர், இருப்பு, காலநிலை, சந்தை விலை போன்ற பல காரணங்கள் விளைவாகப் பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு ஆண்டுகளுக்கு ஆண்டு மாறுபடும்.

3. நிலத்தடி நீரின் அளவையும் தன்மையும் யாரால் கண்காணிக்கப்படுகிறது?

நிலத்தடி நீரின் அளவையும் தன்மையையும் மத்திய நிலத்தடி நீர் வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

4. நெல் உற்பத்தித் திறனை 1965 முதல் 2015 வரை பட்டியலிடுக

நெல்லின் உற்பத்தித் திறன்

1965 – 1966 ஆம் ஆண்டுகளில் 1409 கிலோவாக இருந்தது.

1975 – 1976 ஆம் ஆண்டுகளில் 2029 கிலோவாக உயர்ந்தது.

1985 – 1986 ஆம் ஆண்டுகளில் 2372 கிலோ என மீண்டும் உயர்ந்தது.

பத்து ஆண்டுகளுக்குப் பின் நெல்லின் உற்பத்தித் திறன் 2712 கிலோ

2017 – 2015 ஆம் ஆண்டுகளில் உற்பத்தித் திறன் 4429 கிலோ ஆகும்.

5. பயிர்களின் விளைச்சல் எத்தனைச் சார்ந்து இருக்கிறது?

பயிர்களின் விளைச்சல் பயிரிடப்படும் பரப்பளவு மட்டுமின்றி பயிர்களின் உற்பத்தித் திறனையும் சார்ந்து இருக்கிறது.

6. சிறு மற்றும் குறு விவசாயிகளை வேறுபடுத்துக.

குறு விவசாயிகள்:

1. தமிழகத்தில் பெரும்பாலான விவசாயிகள் குறு விவசாயிகள் ஆவர். ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர் குறு விவசாயிகள் ஆவர்.

2. மொத்த விவசாயிகளின் எண்ணிக்கையில் குறு விவசாயிகள் 78 விழுக்காடு உள்ளனர்.

3. ஆனால் அவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு மொத்தச் சாகுபடி உற்பத்தியில் 36 விழுக்காடு மட்டுமே.

சிறு விவசாயிகள்:

1. 1 – 2 ஹெக்டேர் சாகுபடி செய்வோர் 14 விழுக்காடு உள்ளனர்.

2. அவர்கள் விவசாயம் செய்யும் பரப்பளவு 26 விழுக்காடு ஆகும்.

தமிழ்நாட்டில் விளையும் பயிர்களைப் பட்டியலிடுக

பயிர்கள்	நிலப்பரப்பு	உற்பத்தி	Productivity
A. தானியங்கள்			
நெல்	2000212	7374681	3687
சோளம்	339166	439619	1301
கம்பு	51606	134331	2616
B. பயறு வகைகள்			
கொண்டைக்கடலை	4876	3176	652
கொள்ளு	59007	59968	1016

பாசிப்பயறு	238842	134246	562
C. எண்ணெய் வித்துகள்			
நிலக்கடலை	346611	892280	2574
எள்	46017	29369	368
தேங்காய்	434875	59625	13711
D. மற்ற பயிர்கள்			
பருத்தி	148087	326659	375
கரும்பு	252272	25508824	101
புகையிலை	3348	5161	1527

2. இடம் பெயர்தல்

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இடப்பெயர்வு இரண்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. ஒன்று பிறப்பிடம் அடிப்படையில் இரண்டு வாழ்விடம் அடிப்படை ஆகும். கி.பி. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 145 கோடி மக்கள் வாழ்தலில் அடிப்படையில் இடம் பெயர்ந்தவராகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும், தமிழகத்திலும் கிராமப்புறங்களில் இடப்பெயர்வு அதிகமாகக் காணப்படுகிறது. இடப்பெயர்வு பெரும்பாலும் பெண்களை விட ஆண்களோடு மட்டுமே தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இந்தியாவிலும் தமிழகத்திலும் திருமணம் சார்ந்த இடப்பெயர்வுக்கு முக்கிய காரணமாக விளங்குகிறது. வேலையும் வேலைவாய்ப்பும் ஆண்களுக்கு இடையில் இடம் பெயர்வுக்கு காரணங்களாகும்.

2011 கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் ஐந்தில் இருவர் இடம் பெயர்ந்தவராக உள்ளனர். கிராமப் புறங்களிலும் பெண்கள் இடப்பெயர்வு செய்கின்றனர். வியாபாரம், வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பல்வேறு காரணங்களுக்கானத் தமிழர்கள் பலநாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். அண்மை காலங்களில் தமிழகத்திலிருந்து வளைகுடா நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு மிக அதிக அளவில் தொழிலாளர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

சென்னை மாவட்டம் அதிக எண்ணிக்கையிலான வெளி குடியேற்றப்பதிவில் முன்னிலை வகிக்கின்றது. கடலூர், கரூர், திருவண்ணாமலை, மேலூர், நாமக்கல், சேலம், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நீலகிரி, நீலகிரி மாவட்டங்களில் மிகக் குறைந்த அளவிலான வெளி – குடியேற்ற எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளது.

சிங்கப்பூர், ஐக்கிய அரபு எமிரேட்டிலும், சவுதி அரேபியா, ஐக்கிய நாடுகளுக்கும் இடம் பெயர்ந்து குடியேறி உள்ளனர். சர்வதேச குடியேறுபவர்களில் 15% பெண்களாகவும், 85% ஆண்களாகவும் உள்ளனர். திறமை வாய்ந்த வேலைகளிலும் சாதாரணமாகச் செய்யக் கூடிய வேலைகளிலும், நடுத்தரமான வேலைகளிலும் இடம் பெயர்ந்தவர்கள் ஈடுபடுகின்றனர். பொருளாதாரத்தில் விவசாயம் மற்றும் தொழில்துறைகளால் ஏற்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் இடம் பெயர்வு நடைபெறுகிறது. ஏழை மக்கள்

கிராமப் புறங்களில் நிலவும் துயர நிலையிலிருந்து விடுபட்டு வாழ்வதற்காக இடம் பெயர்கின்றனர். ஒவ்வொரு இடப்பெயர்வு நகர்வும் வெவ்வேறு வகையான வகுப்பு சார்ந்த குடியேறுபவர்களை கொண்டிருக்கின்றன. பெருநகரங்கள் நோக்கி குவியும் இடம் பெயர்தலைத் திசை மாற்றி அமைத்திடும் கொள்கைகள் விரும்பத்தக்க கொள்ளை முடிவுகள் ஆகும்.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கள் தொகை

அ) 121 கோடி ஆ) 221 கோடி

இ) 102 கோடி ஈ) 100 கோடி

2. வெளிகுடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்டம்

அ) இராமநாதபுரம் ஆ) கோயம்புத்தூர்

இ) சென்னை ஈ) வேலூர்

3. 2015 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து இடம் பெயர்ந்வர்களில் கல்வியறிவற்றோரின் சதவீதம்

அ) 7% ஆ) 7.5% இ) 23% ஈ) 9%

4. ஏழைமக்கள் இடப்பெயர்வை மேற்கொள்வது

அ) வாழ்வாதாரத்திற்காக ஆ) வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள

இ) சேவைக்காக ஈ) அனுபவத்தைப் பெறுவதற்காக

2. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. **பிறப்பிடம்** மற்றும் **வாழ்விடம்** அடிப்படையில் இடப்பெயர்வு கணக்கிடப்படுகிறது.

2. மக்கள் நகர்வு, நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் **அதிகமாக** காணப்படுகின்றன.

3. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கிராமப்புற இந்தியாவில் **37** சதவீத மக்கள் இடம் பெயர்ந்தவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

4. பெண்கள் அதிக அளவில் இடம் பெயர்வதற்கான காரணம் **திருமணம்**

5. இடம்பெயர்வு நகர்வு என்பது **பல்வேறு வகைப்பட்ட** உள்நகர்வுகளைக் கொண்டதாகும்.

3. பொருத்துக

1. இடம் பெயர்வு கொள்கை - வேலை

2. பெண் இடப்பெயராளர் - வெளி குடியேற்றம் குறைவு

3. சென்னை - வெளி குடியேற்றம் குறைவு

4. வசதி, வாய்ப்புடைய இடப்பெயராளர் - இடம் பெயர்தலின் அளவைக் குறைப்பது

6. ஆண் இடப்பெயராளர் - வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள

விடை:

1. இடம் பெயர்தலின் அளவைக் குறைப்பது 2. திருமணம்

3. வெளி குடியேற்றம் அதிகம் 4. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள

5. வெளி குடியேற்றம் குறைவு 6. வேலை

4. சிறுவினாக்கள்

1. இடப்பெயர்தலுக்கான காரணங்களைப் பட்டியலிடுக

வியாபாரம், வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பல்வேறு காரணங்களுக்காக தமிழர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

2. இந்தியாவில் பெண்கள் இடம் பெயர்தலுக்கான முக்கியக் காரணங்கள் யாவை?

இந்தியாவிலும் தமிழகத்திலும் திருமணமும், திருமணம் சார்ந்த இடப்பெயர்வும் முக்கிய காரணமாக விளங்குகிறது. வேலைவாய்ப்பைத் தேடியும் பெண்கள் இடம் பெயர்கின்றனர்.

3. மிகக் குறைவான எண்ணிக்கையில் வெளி இடப்பெயர்வைக் கொண்ட தமிழ்நாட்டிலுள்ள நான்கு மாவட்டங்களின் பெயர்களைக் கூறுக

கடலூர், கரூர், சேலம், வேலூர்

4. ஏழை மக்கள் மற்றும் வசதி வாய்ப்புடைய மக்கள் இடப்பெயர்வதற்கான காரணங்கள் யாவை?

ஏழை மக்கள் கிராமப்புறங்களில் நிலவி வரும் தங்களது துயர நிலையிலிருந்து தங்கள் வாழ்வாதாரத்தை மீட்டுக்கொள்ளும் உத்தியாக இடப்பெயர்வை மேற்கொள்கின்றனர்.

வசதி வாய்ப்புகள் உடைய மக்கள் தங்களது வாழ்நிலையை மேம்படுத்துவதற்காக இடம் பெயர்தலை மேற்கொள்கின்றனர்.

5. தமிழ்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் செல்லும் நான்கு நாடுகள் மற்றும் சதவீதத்தினைப் பட்டியலிடுக

20% மக்கள் சிங்கப்பூரில் குடியேறி உள்ளனர். 18% ஐக்கிய அரபு எமிரேட்டிலும் 16% சவுதி அரேபியா, 13% பேர் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் இடம் பெயர்ந்து குடியேறி உள்ளனர்.

6. இடப்பெயர்ந்தோர்கள் மேற்கொள்ளப்பட்ட தொழில்களைப் பற்றி ஆய்வுகள் வெளிப்படுத்துவது யாது?

இடம் பெயர்ந்தோர்கள் மேற்கொள்ளப்பட்ட தொழில்களைப் பற்றிய ஆய்வுகள் இடம் பெயர்ந்தவர்கள் மேற்கொள்ளும் வேலையின் தன்மை பற்றியும் வெளிப்படுகிறது. மிகவும் திறமை வாய்ந்த வேலைகளிலும் சாதாரணமாக செய்யக் கூடிய வேலைகளிலும் நடுத்தரமான வேலைகளிலும் இவர்கள் ஈடுபடுக்கின்றனர்.

winmeen.com